வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 26.07.2025 சனிக்கிழமை | இதழ் : 207 | பக்கங்கள் : 12




# மாகாண சபை முறைமையை அரசு பலவீனப்படுத்துகிறது!

## தமிழ் அரசு கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 26

**"மாகாண சபை முறைமையை அரசாங்கம் திட்டமிட்டு பலவீனப் படுத்துகிறது" என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது போக்குவரத்து, நெடுஞ்சாலை அமைச்சர் பிமல் ரத்நாயக்காவிடம் கேள்வி ஒன்றை முன்வைத்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் செயல்பாடுகள் எமது உரிமைகளை நலிவாக்க திட்டமிட்டே இடம் பெறுகின்றன. பாராளுமன்றத்தில் உள்ள இந்த கேள்வி பதில் முறையை மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டும். ஏனெனில், இந்த கேள்வியை நான் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகி ஒருசில வாரங்களிலேயே வழங்கியிருந்தேன். இந்தக் கேள்வி ஆறேழு மாதங்களுக்கு பின்னர் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், நீங்கள் சிலவேளை அதற்கான வேலைகளை ஆரம்பித்து இருக்கலாம். அந்த வேலைத்திட்டம் உலக வங்கியின் நிதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது எனக்கும் தெரியும்.

எனது முதலாவது கேள்வி,

11

# மாகாண சபைகளை பலவீனப்படுத்தவில்லை

## இனவாதம் செய்யாதீர்கள் என்று சபை முதல்வர் பிமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

"மாகாண சபைகளை பலவீனப்படுத்தும் எந்த நடவடிக்கையிலும் அரசாங்கம் ஈடுபடவில்லை. இனவாத அரசியலை செய்ய வேண்டாம்.", என்று சபை முதல் வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் இரா. சாணக்கியன் எம். பி. முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இந்த வருடம் மாகாண சபைகளின் செலவுக்காக கடந்த வருடங்களை விடவும் மூன்று மடங்கு நிதி ஒதுக்கியுள்ளோம். எங்களுக்கு வங்குரோத்து அடைந்த நாடே கிடைத்திருந்தது. வீதிகளை அபிவிருத்தி செய்ய நிதி அமைச்சு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நிதியை ஒதுக்கியுள்ளது. இதனால் மாகாண சபை முறைகளை பலவீனப் படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

11

# இனவழிப்புக்கு சர்வதேச நீதி கோரி வடக்கு, கிழக்கில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 26

திட்டமிட்ட முறையில் நாட்டில் மேற்கொள்ளப்படும் இன அழிப்புக்கு சர்வதேச நீதி கோரிய போராட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடக்கு, கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது.

வடக்கு, கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் செம்மணியிலும் கிளிநொச்சியில் கந்தசுவாமி கோயில் முன்பாகவும் மன்னார் நகரப் பகுதியிலும் வவுனியாவில் புதிய பேருந்து நிலையம் முன்பாகவும் முல்லைத்தீவில் மாவட்ட செயலகம் முன்பாகவும் மட்டக்களப்பில் காந்தி பூங்காவிலும் திருகோணமலையில் சிவன் கோயில் அருகிலும், அம்பாறை திருக்கோவில் பகுதியிலும் இந்த முன்னெடுக்கப்பட வுள்ளது.

இதேநேரம், இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக கொழும்பில் ஐ. நா. பணிமனை முன்பாகவும் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற வுள்ளது.

(ஐ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சபையில் கடும் வாத பிரதிவாதங்கள்

கொழும்பு, ஜூலை 26

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நேற்றைய தினம் பாராளுமனறத்தில் பலத்த வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன. அத்துடன், சபையில் குழப்பமும் ஏற்பட்டது.

நேற்றைய தினம் பாராளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய,

"ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் இதுவரையில் ஒரு விசாரணை குழு மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற நீதியரசர் ஜனக் டி சில்வாவின் தலைமையில் 2019 செப்ரெம்பர் 21ஆம் திகதி நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை 2021 பெப்ரவரி மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கை பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது என்று பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், குறித்த அறிக்கையை சட்ட மா அதிபர் ஆய்வு செய்து வருகிறார். அவரிடம் இருந்து பரிந்துரைகளைப்

11

# கிராம பொருளாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஜூலை 26

நாட்டின் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு தேசிய தொழில் துறை திட்டமிடல் மூலோபாய சபை எதிர்காலத்தில் நிறுவப்படும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த சபை நாட்டின் வர்த்தகத் துறையை மேம் படுத் துவதற்குத் தேவையான தொழில்நுட்ப,

11

# சிறுமியிடம் அத்துமீறிய 62 வயது நபர் கைதானார்

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 26

10 வயது சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 62 வயது நபர் ஒருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்று வெள்ளிக் கிழமை கைதுசெய்துள்ளனர்.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

11

# 2 சிறாரின் எலும்புக்கூடுகள் புதைகுழியிலிருந்து மீட்பு!

## புதிய இடங்களில் அகழ்வுக்கு திட்டம்

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 26

அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் நேற்றைய தினமும் இரு எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் சிறாருடையவை என்று கருதப்படுகிறது. அத்துடன், நேற்றைய தினம் 5 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

11

# இரா. சம்பந்தனுக்கு பாராளுமன்றில் அனுதாபம்!

கொழும்பு, ஜூலை 26

இரா. சம்பந்தன் நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்கும் பொருத்தமானவராக இருந்தார்.

பாராளுமன்றத்தில் காணக்கிடைத்த மிகச் சிறந்த ஆளுமையாகவும் அரசியல்வாதிகளுக்கு உதாரண புருஷராகவும் திகழ்ந்தார் என்று அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற

11

# வசந்த, மகிந்த, ரஞ்சனிடம் வாக்குமூலம் பதிய உத்தரவு

## கல்கிசை நீதிமன்றம் பிறப்பித்தது

கொழும்பு, ஜூலை 26

போலி ஆவணங்களை தயாரித்து சொத்துகளை குத்தகை அடிப்படையில் வழங்கி மோசடியில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அமைச்சர் வசந்த சமரசிங்க, பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க, கடுவலை மாநகர முதல்வர் ரஞ்சன் ஜயலால் ஆகியோரிடமிருந்து வாக்குமூலங்களை பதிவு செய்யுமாறு கொழும்பு மோசடி விசாரணை பணியகத்துக்கு கல்கிசை நீதிவான் ஏ. டி. சத்துரிகா டி சில்வா நேற்று

11

தீர்வை வரி குறைப்பு

# ஜனாதிபதி அநுர குமார அமெரிக்காவுடன் பேச்சு

கொழும்பு, ஜூலை 26

இலங்கை ஏற்றுமதிக்கு அமெரிக்கா விதித்துள்ள தீர்வை வரிகளை குறைப்பது தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கும் அமெரிக்காவின் வர்த்தக முகவர் அலுவலகத்தின் தூதுவர் ஜேமிசன் கிரிருக்கும் இடையில் இணையவழியில் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளதாக அறிய வருகிறது.

இலங்கை மீது விதிக்கப்பட்டுள்ள தீர்வை

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளை விரைந்து விடுதலை செய்க!

## வலி. தென்மேற்கு சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

அரசியல் கைதிகளின் விடுதலையை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி வலி. தென்மேற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் உறுப்பினர் க. உஷாந்தனால் முன்வைக்கப்பட்ட இந்தப் பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்போது, உரையாற்றிய உறுப்பினர் உஷாந்தன், மிக மோசமான துன்பியல்கள் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கறுப்பு ஜூலையை நினைவேந்தி வருகிறோம்.

பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு காரணங்களை காட்டி சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் இருள் சூழ் நாட்களை கழித்து வருகின்றனர். அவர்கள் எவ்விதமான நிபந்தனையும் இன்றி பொது மன்னிப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ-05)

# கனடாவிலிருந்து வந்தவர் வீட்டிலிருந்து சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

கனடாவில் இருந்து விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்தவர் சடலமாக மீட்கப்பட்டார்.

குருநகரை சேர்ந்த பி. மரியதாசன் என்பவரே நேற்று முன்தினம் அவரின் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

குடும்பத்துடன் கனடாவில் வசித்து வந்த நபர், விடுமுறையை கழிக்க தனியாக யாழ்ப்பாணம் வந்து, அவரின் வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் அவரின் உறவினரொருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அவரது வீட்டுக்கு சென்ற போது, அவர் வீட்டில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை உடற்கூராய்வுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைத்தனர். (ஐ)



# அராலி சரஸ்வதி இந்து கல்லூரியில் விளையாட்டரங்கு திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியில் சண்முகலிங்கம் - அன்னலட்சுமி ஞாபகார்த்த விளையாட்டு அரங்கு திறப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அரங்குக்கு அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றப்பட்டு, இறை வணக்கம் நடைபெற்றது. பின்னர் விளையாட்டு அரங்கு சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டி திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் முதல்வர் கு. பாலகுமரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஒய்வு நிலை கணக்காய்வு அத்தியட்சகர் செ. சிவகுரு, சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி நா. பார்த்திபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-05)

# சட்டவிரோதமாக விடுதலையான நபருக்கு 7 ஆண்டு கடுங்காவல் சிறை

கொழும்பு, ஜூலை 26

ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து சட்டவிரோதமாக விடுதலை செய்யப்பட்ட டபிள்யூ. எம். அதுல திலகரத்னவுக்கு, அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி நளின் டி ஹேவாவசம் ஏழு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

போலி ஆவணங்களை தயாரித்து வங்கி ஒன்றிலிருந்து 35 இலட்சம் ரூபாயை முறை கேடாக பெற்று, அந்தப் பணத்தை தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

வங்கியில் இருந்து பணம் பெறுவதற்காக போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றத்துக்கு ஐந்து ஆண்டுகளும் பெறப்பட்ட பணத்தை முறை கேடாகப் பயன்படுத்திய குற்றத்துக்கு மேலும் இரண்டு ஆண்டுகளும் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் வாதியான மருத்துவர் எஸ்.டபிள்யூ.ஏ. காமினி விமலானந்தவுக்கு 4 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறும் இந்த இழப்பீட்டை செலுத்தத் தவறினால் மேலும் 10 மாதங்கள் கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# இந்திய மீனவர்களுக்கு மீண்டும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட தமிழக கடற்றொழிலாளர்கள் எழுவரையும் எதிர்வரும் ஓகஸ்ட் 06ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்திய கடற்றொழிலாளர்கள் கடந்த 13 ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நேற்றைய தினம் இவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே நீதிமன்றம் மேற்கண்ட உத்தரவை பிறப்பித்தது.

இதேவேளை, இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 25 படகுகளுடன் 185 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சம்பிக்கவுக்கு எதிரான வழக்கு; நவம்பர் 18இல் விசாரணைக்கு!

கொழும்பு, ஜூலை 26

கொழும்பு - இராஜகிரியவில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூன்று பேருக்கு எதிரான வழக்கை நவம்பர் 18ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

2016ஆம் ஆண்டு இராஜகிரியவில் நடந்த ஒரு வாகன விபத்தில் ஒர் இளைஞனுக்கு பலத்த காயம் ஏற்படுத்தியது. விபத்து தொடர்பான சாட்சியங்களை மறைத்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட மூன்று பேர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டது.


சந்தேக நபர்களில் ஒருவர் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சாரதியாவார். மற்றொரு சந்தேக நபர் அப்போதைய வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் தற்போதைய உதவி பொலிஸ் அத்தியட்சகருமான சுதத் அஸ்மடல ஆவார்.

இவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வழக்கை மாற்ற முடியாது என்றும் தொடர முடியாது எனவும் ரணவக்க தாக்கல் செய்த மேல்முறையீட்டை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதுடன் வழக்கை தொடரவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குறித்த வழக்கில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் ஆஜராவார் என அரசு தரப்பு சட்டத்தரணி தெரிவித்தார். வழக்கிற்கு தினமொன்று நியமிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கமைய விசாரணையை நவம்பர் 18 ஆம் திகதி நடத்த உத்தரவிடப்பட்டது. குறித்த தினத்தில் ஆஜராகும் வகையில் வழக்கின் சாட்சிகளுக்கு அழைப்பாணை விடுக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (ஐ)

# கிணற்றில் விழுந்த யானைகளில் ஒன்று உயிரிழப்பு; மற்றையது மீட்பு



வவுனியா, ஜூலை 26

வவுனியாவில் கிணற்றில் இரு யானைகள் கிணற்றில் தவறி விழுந்தன. இதில் ஒன்று உயிரிழந்த நிலையில், மற்றைய யானை பாதுகாப்பாக மீட்கப்பட்டது.

வவுனியா வடக்கு, கரப்புக்குத்தி பகுதியில் பாதுகாப்பற்ற விவசாய கிணறு ஒன்றில் இரு யானைகள் விழுந்துள்ளன என்று அந்தப் பகுதி கிராம அலுவலருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இது தொடர்பில் வனவள திணைக்களம், பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் பெரும் சிரமத்தின் மத்தியில் யானைகளில் ஒன்றை மீட்டனர்.

மற்றைய யானை நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் அதன் சடலம் மீட்கப்பட்டது.

இரு யானைகளும் ஒன்றன் பின் ஒன்றாக கிணற்றில் விழுந்தமையால் மற்றைய யானை உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

# ஜே. வி. பி. பற்றிய சொல்லாடலால் மானிப்பாய் சபை கூட்டத்தில் குழப்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 26

மானிப்பாய் பிரதேச சபையில் ஜே. வி. பி. பற்றி தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர் பயன்படுத்திய சொல்லாடலால் குழப்பம் ஏற்பட்டது.

மானிப்பாய் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது. இதன்போது இலங்கை தமிழ் அரசு கட்சியின் உறுப்பினர் லே.ரமணன், "ஜே. வி. பி. காடைத்தனமான கட்சி", என்று கூறினார்.

இதனால், கோபமடைந்த தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் தனு உறுப்பினரின் வார்த்தைப் பிரயோகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார். இதனால், கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது.

கடும் பிரயத்தனத்தின் பின்னர் சபையில் மீண்டும் அமைதி நிலையை தவிசாளர் ஏற்படுத்தினார். (ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
26.07.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 10

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## அரசியல் விழிப்புணர்வு

அரசியலால் ஒரு சமூகத்தை ஆக்கவும் முடியும் - அழிக்கவும் முடியும் என்று ஒரு கூற்றுண்டு. இந்தக் கூற்று எந்த சமூகத்திற்கெல்லாம் பொருந்துமோ அல்லது இல்லையோ - நிச்சயமாக ஈழத் தமிழ் சமூகத்துக்குப் பொருந்தும். ஒரு சமூகத்தை அரசியல் ரீதியாக இலகுவாக ஏமாற்ற முடிகிறது என்றால் அந்த சமூகம் அரசியல் ரீதியில் விழிப்புணர்வற்ற சமூகமாகும்.

ஈழத் தமிழ் சமூகம் குறிப்பாக, யாழ்ப்பாண சமூகம் தன்னை கல்வியில் முன்னேறிய சமூகமாக கருதியிருந்த ஒரு சமூகம். சிங்களவர்களை "மோட்டுச் சிங்களவர்கள்", என்று கூறி, தன்னைத்தானே உயர்த்திக் கொண்ட சமூகம். ஆனால், அரசியல் ரீதியில் இன்று தமிழ் சமூகம் வந்திருக்கும் இடமானது மிகவும் மோசமான இடம். வரலாறோ, சிங்கள மக்களுக்கு முன்னால் தமிழர்களை "மோட்டுத் தமிழர்கள்" என்றே வரையறை செய்திருக்கிறது. ஏனெனில், கடந்த 75 ஆண்டுகளாக சிங்கள இராஜதந்திரத்துக்கு முன்னால் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டிருக்கும் ஓர் இனமாகவே தமிழர்கள் இருக்கின்றனர்.

ஒரு வியாபாரம் தொடர்ந்தும் நஷ்டத்தில் போய்க் கொண்டிருக்கிறது என்றால் - அதில் முதலீடு செய்தவர் அந்த வியாபாரத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதனைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது நஷ்டத்தைத்தான் தருமென்று கருதினால் வியாபாரத்தை முற்றிலுமாக கைவிட வேண்டும் - புதிய வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டும். ஆனால், நஷ்டம் வருகிறது என்று தெரிந்தும் அந்த வியாபாரத்தை ஒருவர் தொடர்கிறார் என்றால், ஒன்றில் அவர் தான் என்ன நிலையில் இருக்கிறேன் என்னும் விழிப்புணர்வு அற்றவராக இருக்க வேண்டும் அல்லது சித்தசுவாதீனம் இல்லாதவராக இருக்க வேண்டும்.

அரசியல் ரீதியாக நோக்கினால் ஈழத் தமிழ் சமூகத்தின் இன்றைய நிலை இப்படியான ஒன்றுதான். இதற்கான அடிப்படையான காரணம் என்ன? ஒரு சமூகம் அரசியல் ரீதியில் விழிப்புணர்வுள்ள சமூகமாக இருக்கின்றபோது மட்டும்தான் அதனால் முன்னோக்கி நகர முடியும். இன்று ஈழத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தலைவர்கள் என்போரின் ஆற்றலையும் அவர்களின் ஆளுமையையும் உற்று நோக்கினால் தமிழ் சமூகத்தின் விழிப்புணர்வின் அளவைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்த அடிப்படையில் நோக்கினால் இப்போது பிரச்னை அரசியல்வாதிகள் அல்லர். மாறாக, தமிழர்களின் அரசியல் விழிப்புணர்வின்மையே அடிப்படையான பிரச்னையாகும். ஏனெனில், அந்த விழிப்புணர்வு இன்மைதான் பொருத்தமற்றவர்களுக்கு பொருத்தமற்ற இடங்கள் கிடைப்பதற்கான காரணமாக இருக்கிறது.

மக்களை விழிப்பூட்டும் முக்கிய பொறுப்பு கருத்துகளை ஆக்கும் - செய்திகளை ஆக்கும் ஊடகங்களுக்கு உண்டு. ஆனால், யுத்தத்தின் காரணமாகவே என்னவோ தமிழில் ஊடகங்களும் பெருமளவுக்கு அரசியல் கட்சி மயப்பட்டவையாக சுருங்கிப் போய்விட்டன. கருத்துருவாக்கிகள் தாங்களின் கருத்துகளை புனிதமானவையாக பேணிப் பாதுகாக்க முற்படுகின்றனர். தங்களின் முன்னைய நிலைப்பாடுகள் பொருத்தமற்றவை என்று அவதானித்தால் அதனை கைவிடும் அரசியல் துணிவற்றவர்களாக இருக்கின்றனர். இவ்வாறான காரணங்களால், தமிழ் மக்கள் தொடர்ந்தும் அரசியல் விழிப்புணர்வற்ற சமூகமாகவே இருக்கிறது. இதிலுள்ள கவலைக்குரிய விடயம் என்னவென்றால் தாங்கள் விழிப்புணர்வற்றவர்களாக இருக்கிறோம் என்பதே பெரும்பாண்மையான மக்களுக்கும் தெரிவதில்லை.

# தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் நினைவேந்தல் இன்று யாழில்!

யாழ்ப்பாணம்,ஜூலை 26

42ஆவது தமிழ் தேசிய வீரர்கள் தினம் யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவு கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணி நடைபெறவுள்ளது.

1983 ஜூலையில் வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் நிறுவுநர் தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி மூத்த போராளிகள் ஜெகன், தேவன், நடேசுதாசன் உட்பட 53 ஈழ விடுதலைப் போராட்டத்தின் பிதாமகர்கள், பொது மக்களை நினைவுகூருவதாக ஏற்பாட்டு குழுவின் கு. சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக மூத்த ஊடகவியலாளர் வீ. தனபாலசிங்கம், இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், ரெலோ தலைவரும் எம். பியுமான செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசிய பேரவையின் தலைவரும் எம். பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தாத்தன், ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி. நவீந்திரா (வேந்தன், சமத்துவ கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# கிளிநொச்சி மருத்துவமனையின் மின்தூக்கி செயலிழந்ததால் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 26

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் பயன்பாட்டிலுள்ள மின் தூக்கி கடந்த 4 நாட்களாக செயலிழந்த நிலையில் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிய வருகின்றது.

சத்திர சிகிச்சை கூடம், அவசர சிகிச்சை, உள்ளிட்டவற்றுக்கு நோயாளிகளை அழைத்துச் செல்லுதல், சிகிச்சை நிறைவுற்றதும் விடுதிகளுக்கு மீளவும் அழைத்து வருவது போன்றவற்றுக்கு பயன்படுத்தப்பட்ட மின் தூக்கியே செயலிழந்துள்ளது.

இதனால் நோயாளிகளை படிகட்டு வழியாக சுமந்து செல்வதும் சிகிச்சை நிறைவுற்றதும் அங்கிருந்து மீளவும் சுமந்து செல்வதும் என்று ஊழியர்களும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன், ஆபத்தான சத்திர சிகிச்சை மேற்கொண்ட நோயாளிகள், மற்றும் நடமாட முடியாத நோயாளிகள் எனப் பலரும் இதனால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். மாவட்ட மருத்துவமனையில் ஒரேயொரு மின்தூக்கியே பயன்பாட்டிலுள்ள நிலையில் அதுவும் செயலிழந்துள்ளது என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இது தொடர்பில் மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "மின்தூக்கியை திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன", என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அரியாலை மனித புதைகுழி; சர்வதேச விசாரணை தேவை

## ரெலோ கட்சி வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை 26

அரியாலை (செம்மணியின் தொடர்நிலம்) மனிதப் புதைக்குழியில் தோண்டத் தோண்ட மனித எச்சங்கள் வெளிவருகின்ற நிலையில் சர்வதேச விசாரணை மூலமே உண்மையை நிலைநாட்டமுடியும் என்று ரெலோ கட்சியின் ஊடகப் பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டு செம்மணி மனிதப் புதைகுழி தோண்டப்பட்ட நிலையில் 15 மனித எலும்புக்கூடுகள் மட்டும்தான் இருக்கின்றன என்று கூறப்பட்ட நிலையில் தற்போது எண்பது மனித எலும்புக்கூடுகளை கடந்து விட்டது.


ஏற்கனவே செம்மணி புதைகுழி வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட இராணுவ அதிகாரி குறித்த பகுதியில் 600 வரையான சடலங்கள் புதைக்கப்பட்டன என்று சாட்சியம் அளித்துள்ளார்.

இதன் அடிப்படையில் குறித்த பகுதியில் அகழ்வு பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் அதனை கண்காணிப்பதற்கு சர்வதேச நிபுணர்களை அழைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏனெனில், இலங்கை பாதுகாப்பு துறையின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்தில் பெரும் மனித எச்சங்கள் வெளிவருகின்ற நிலையில் அதனை மூடி மறைப்பதற்கு அரசாங்கம் முயலக்கூடும். இந்நிலையில் தற்போது அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் அரசாங்கம் அகழ்வு பணிக்கான நிதிகளை தடையின்றி வழங்க வேண்டும்.

குறித்த புதை குழி தொடர்பில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உரிய நீதி கிடைப்பதற்கு சர்வதேச விசாரணையை மேற்கொள்வதே சிறந்த தீர்வுக்கு வழிவகுக்கும் - என்றார். (ஐ-05)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**இடபம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வாகனத்தை வாங்குவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வெற்றி பெறும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களை குறை கூறிக்கொண்டிருக்க வேண்டாம். நேர் மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். அரசு காரியங்கள் இழுபறியாகும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். மோதல்கள் வேண்டாம்.

**கன்னி**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார். புகழ் கௌரவம் கூடும்.

**துலாம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**விருட்சிகம்**
கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் பிறக்கும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கப் பாருங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

# மின்னியலாளர்கள் வாடிக்கையாளருக்கு திருப்திகரமான சேவை வழங்க வேண்டும்

## யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26

மின்னியலாளர்கள் வாடிக்கையாளருக்கு திருப்திகரமான சேவையை வழங்கக் கூடிய மனப்பாங்கை வளர்க்க வேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.


வடமாகாணத்தில் உள்ள மின்னியலாளர்களுக்கு தேசிய தொழில் தகைமை (என். வி. கியு- 3) சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் அரசாங்க அதிபர் மேலும் கூறுகையில்,

"பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் மின்னியலாளர்கள் பயிற்சியை பெற்றிருந்தாலும் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் என்பது சர்வதேச ரீதியாக வலுப்பெற்ற சான்றிதழாக பயிற்சியை பெற்றவர்களுக்கு இது ஒரு சமூக அங்கீகாரமாக காணப்படுகிறது. மேலும், தொழிலில் உள்ளவர்களுக்கு பயிற்சியை வழங்கும் போது அவர்களின் அன்றாட வருமானம் பாதிக்கப்படுவதாகவும் எனினும் ஒவ்வொருவரதும் தகுதிகள் பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே இந்த மின்னியலாளர்களுக்கான பயிற்சிநெறி வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மின்னியலாளர்களின் சேவை வாடிக்கையாளர்களுக்கு திருப்திகரமானதாக இல்லாமையால் வாடிக்கையாளர்கள் மின்னியலாளர்களின் சேவையை வெளிமாவட்டங்களிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாகவும் அரச அதிபர் கவலை வெளியிட்டார்.

எனவே, யாழ். மாவட்ட மின்னியலாளர்களின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. குறுகிய காலத்தில் பெற்றுக்கொண்ட இந்த தேசிய தொழில் தகைமை சான்றிதழ் மூலமாக வாடிக்கையாளருக்கு திருப்திகரமான சேவையை வழங்கக் கூடிய மனப்பாங்கை அனைவரும் வளர்க்க வேண்டும். சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குதல் மூலமாக நிச்சயமாக வருமான மட்டம் உயர்வடையும்"- என்றார்.

(எ)






# வடக்கிலுள்ள 150 மின்னியலாளர்களுக்கு யாழ்ப்பாணத்தில் சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 26

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவால் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை ஊடாக பயிற்சி பெற்ற வடமாகாணத்திலுள்ள 150 மின்னியலாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம்

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் நடைபெற்றது. இதில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில், இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஜெயநாத் கேரத், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (தொடர்பாடல்) ஏ. ஜெயசூரியன், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர்கள், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்சியை நிறைவு செய்த மின்னியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ)

# நல்லூரில் நிலத்தடி நீர் பாதுகாப்பு விழிப்புணர்வு கண்காட்சிக் கூடம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

நிலத்தடி நீர் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வுக்கான கண்காட்சிக் கூடம் இம்முறை நல்லூர் பெருந்திருவிழாவின் போது மக்கள் பார்வைக்காக உருவாக்கப்படவுள்ளது.

நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகில், அரசடி வீதியில் அமைந்துள்ள "நெசவு கைத்தொழில் பயிற்சி நிறுவன வளாகத்தில்" ஒகஸ்ட் 15 - 24 வரை இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் சுவீடன் விவசாய பல்கலைக்கழகத்தின் சூழல் தொடர்பாடலியல் துறை பேராசிரியர் நடராஜா சிறீஸ்கந்தராஜா இதனைத் தெரிவித்தார்.

பல்வேறு பங்குதாரர்களின் பங்களிப்புடன் "வடமாகாணத்தின் நீர் பாதுகாப்பு - பங்காற்றல் செயல் ஆய்வு" எனும் தலைப்பிலான இந்தச் செயல்திட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல ஆய்வுத் துறைகளின் கூட்டு முயற்சியாக 2020ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார்.

(எ)

# திருட்டு குற்றச்சாட்டில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 26

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அரியாலை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடியில் கடை ஒன்றை உடைத்து 6 இலட்சம் ரூபாய் பணம், கமரா சேமிப்பகம் என்பனவற்றை திருடியமை, யாழில் கருவாட்டுக்கடை ஒன்றை உடைத்து திருடியமை, சாவகச்சேரியில் தொலைபேசி கடை ஒன்றை உடைத்து 96 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் மற்றும் 2 தொலைபேசிகளை குறித்த நபர் திருடியமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு மின் நிலையம் நிறுவ ஐந்து இடங்கள் அடையாளம்!

கொழும்பு, ஜூலை 26

**நாட்டில் அணுமின் நிலையத்தை நிறுவுவதற்கு ஐந்து இடங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.**

சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் மறு ஆய்வு பணிகளின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் நடத்தப்பட்ட தொடர்ச்சியான ஒருங்கிணைந்த அணுசக்தி உள்கட்டமைப்பு மறுஆய்வு பணி கடந்த ஜூலை 14 முதல் 18ஆம் திகதி வரை நடைபெற்றது.

அணுமின் நிலையத்துக்கான 5 முன்னோடி தளங்களை இலங்கை ஏற்கனவே அடையாளம் கண்டுள்ளது. அத்துடன், அணு உலைகளுக்கான கொள்முதல் செயல்முறையை மேற்பார்வையிட ஒரு முகாமைத்துவ கட்டமைப்பை நிறுவியுள்ளது. ஒரு விரிவான அணுசக்தி சட்டத்தை வரைந்துள்ளதுடன் 2025 - 2044 காலகட்டத்துக்கான அதன் தற்போதைய நீண்டகால எரிசக்தி திட்டமிடலில் அணுசக்தியையும் சேர்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் திட்டத்தின்படி, இலங்கை 600 மெகாவாட்ஸுக்கு மேல் அணு மின் அலகு உற்பத்திக்கு இடமளிப்பது தொழில்நுட்ப ரீதியாக சவாலானதாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# கிரடிட், டெபிட் அட்டைகளுக்கு 3 வீத கட்டணம் அறவிட முடியாது

கொழும்பு, ஜூலை 26

வர்த்தக நிலையங்களில் கிரடிட், டெபிட் அட்டைகளில் கட்டணம் செலுத்தும் போதே 2.5 அல்லது 3 சதவீத கட்டணம் மேலதிகமாக அறவிட வர்த்தக நிலையங்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வர்த்தக நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்யும்போதே அல்லது சேவைக்கான கட்டணங்களை செலுத்தும்போதோ உரிய விலைகளுக்கு அப்பாலான எவ்வித கட்டணங்களையும் கிரடிட், டெபிட் அட்டைகள் செலுத்தல்களுக்கு அறவிட முடியாது.

இலங்கை மத்திய வங்கி, ஏனைய வங்கிகளுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் பிரகாரம்தான் அட்டைகள் பரிவர்த்தனைகள் இடம்பெறுகின்றன. எனவே, வாடிக்கையாளர்களிடம் மேலதிகமாக 2.5 அல்லது 3 சதவீத கட்டணத்தை வர்த்தக நிலையங்களால் அறவிட முடியாது.

அவ்வாறு அறவிடும் வர்த்தக நிலையங்களில் பற்றுச்சீட்டுகளை பெற்று உரிய வங்கியில் முறைப்பாடு செய்வதன் ஊடாக மீண்டும் குறித்த பணத்தை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் இலங்கை மத்திய வங்கி கூறியுள்ளது.

(ஐ)

# ரோஹித எம். பியின் மருமகனுக்கு மறியல்

கொழும்பு, ஜூலை 26

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவின் மருமகனை எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்ட விரோதமாக ஒன்று சேர்க்கப்பட்ட வாகனத்தை பதிவு செய்தார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# காட்டு யானைகளை காப்பது தொடர்பில் கலந்துரையாடல்



கொழும்பு, ஜூலை 26

காட்டு யானைகளின் உயிர்களைக் காப்பாற்றுவதுடன், கிராமிய மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதுகாப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகளுடன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, காட்டு யானைகளுக்கு ஏற்படுத்தப்படும் தொல்லைகளை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு, குறுகிய - மத்திய - நீண்ட கால அடிப்படையில் தீர்வு எட்டப்பட வேண்டும். கிராம மட்டத்தில் இது தொடர்பில் உன்னிப்பாக ஆராயுமாறு அதிகாரிகளுக்கு இதன்போது ஜனாதிபதி பணிப்புரை விழுத்தார்.

மேலும், இந்தப் பணிக்காக தற்போதைய மனிதவளப் பற்றாக்குறையைப் போக்க, சிவில் பாதுகாப்பு படையின் 5,000 உறுப்பினர்களை உதவியாளர்களாக விரைவாக இணைக்க நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

(ஐ)

# பறவைகள் பூங்கா உரிமையாளருக்கு மறியல் நீடிப்பு!


கொழும்பு, ஜூலை 26

சொகுசு மோட்டார் சைக்கிள்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட அம்பாந்தோட்டை பறவைகள் பூங்கா உரிமையாளரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு அம்பாந் தோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

நேற்று அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே நீதிவான் மேற்படி உத்தரவை பிறப்பித்தார்.

சட்டவிரோதமாக நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட 20 கோடி ரூபாய் பெறுமதியான 21 மோட்டார் சைக்கிள்கள் கடந்த ஜூலை 12ஆம் திகதி கைப்பற்றப்பட்டன. இதையடுத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இ. தொ. காவின் 86ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட நிகழ்வு



நுவரெலியா, ஜூலை 26

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 86ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமை பணிமனையான சௌமியபவனில் நேற்று விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

இந்த பூசை, வழிபாடுகளில் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், உப தலைவர் செல்லச்சாமி மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் கட்சியின் நிர்வாகிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# 40 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 26

40 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்களுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டவர்.

கைதுசெய்யப்பட்டவர் கனடா நாட்டைச் சேர்ந்த 52 வயதுடையவராவார்.

சந்தேக நபரான வெளிநாட்டுப் பிரஜை கனடாவிலிருந்து இருந்து டோஹாவுக்கு சென்று அங்கிருந்து நேற்று காலை கட்டுநாயக்காவை வந்தடைந்திருந்தார்.

சந்தேகநபர் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்றபோது பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் நடத்திய சோதனையில் அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் பயணப் பைகளில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 12 கிலோ 196 கிராம் ஹசீஸ் போதைப் பொருள், 5 கிலோ 298 கிராம் கொக்கைன் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிலையை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# ஆயுதத் திருட்டு; விசாரணை நடக்கிறது

கொழும்பு, ஜூலை 26

பொலநறுவை மின்னேரியா இராணுவ முகாமின் ஆயுதக்களஞ்சியத்தில் ஆயுதத் திருட்டில் ஈடுபட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குழு ஒன்றின் உறுப்பினரை கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று நீதிமன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிமம் இல்லாமல் ரி-56 ரக துப்பாக்கியை வைத்திருந்தமை தொடர்பாகவும் - குறித்த சந்தேக நபரைக் கைது செய்வ தற்கான விசாரணைகள் நடை பெற்று வருகின்றன என்று குற்றப் புலனாய்வு பிரிவினர் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்துள்ள னர்.

எம்.கே. அமில சந்திரானந்த அல்லது நாரஹன்பிட்டி அமில என்றும் அழைக்கப்படும் நபரே இவ்வாறு தேடப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 219 மருந்தகங்களின் உரிமங்கள் இரத்து!


## சுகாதார அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூலை 26

கடந்த ஜூலை 18ஆம் திகதி வரை காலப்பகுதியில் 219 மருந்தகங்களின் உரிமங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 2024-2025ஆம் ஆண்டுக்கான உரிமங்களை புதுப்பிக்க தேசிய மருந்துவ ஒழுங்குமுறை ஆணையம் 2 ஆயிரத்து 39 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது. இதில் 1,820 மருந்தகங்களுக்கே உரிமங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 219 மருந்தகங்களுக்கு உரிமம் வழங்கப்படவில்லை.



137 மருந்தகங்களுக்கு நிரந்தர மருந்தாளுநர்கள் இல்லாததாலும் 82 மருந்தகங்கள் சமூக மருந்தக நடைமுறைகளுக்கான வழிகாட்டுதல்களை பின்பற்றத் தவறியதாலும் உரிமங்கள் வழங்கப்படவில்லை. மருந்தகங்கள் பொதுமக்களின் நலனுக்காக இயங்குகின்றன. எனவே, தர நிர்ணயங்களையும், தொழில்முறை வழிகாட்டுதல்களையும் கடைப்பிடிக்காமல் இயங்கும் மருந்தகங்களுக்கு அனுமதி வழங்க முடியாது" என்றார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே. வி. பிக்கு போட்டி வேறு கட்சி இல்லை!

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

**ஜே. வி. பிக்கு போட்டி வேறு கட்சி இல்லை என்றாலும், அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளே அவர்களுக்கு போட்டியாகும் - என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பொதுஜன பெரமுன கட்சியின் தலைமை பணிமனையில் நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜே.வி.பி.க்கு போட்டியாக வேறு கட்சி இல்லை என்றாலும், அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளே அவர்களுக்கு போட்டியாகும்.

தாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய் என அவர்களே தற்போது நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர். இதுவே, அவர்களுக்கு சவாலாக அமையும். ஏனையோர் மீது குற்றச்சாட்டுகளை முன் வைத்து காலத்தை வீணடித்துக் கொண்டிருப்பதை விட மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்ற வேண்டும். இந்த அரசாங்கத்துக்கு மக்கள் எதற்காக ஆணையை வழங்கினர் என்பதை அவர்கள் மறந்து விட்டனர்.

எனவே, முதலில் அதனை நினைவில் கொண்டு செயல்படுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம். கல்வி மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், வரலாறு பாடம் நீக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஜே. வி. பியின் விருப்பத்துக்கமைய கல்வித்துறையில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. உலக போக்குக்கு அமையவே கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# முன்னாள் அமைச்சர் தயாரத்ன காலமானார்



கொழும்பு, ஜூலை 26

முன்னாள் அமைச்சர் பி. தயாரத்ன தனது 89ஆவது வயதில் காலமானார்.

ஐக்கிய தேசிய கட்சியின் ஊடாக அரசியலுக்கு நுழைந்த இவர், 1977ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார். 1981இல் பிரதி அமைச்சராகவும், 1989இல் மகாவலி அபிவிருத்தி அமைச்சராகவும் 2001இல் சுகாதார அமைச்சராகவும் பணியாற்றியிருந்தார்.

2007ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்தார். எனினும், 2015ஆம் ஆண்டு மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)


# ஜனாதிபதி மாலைதீவு பயணம்!

கொழும்பு, ஜூலை 26

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மாலைத்தீவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நாளை மறுதினம் ஜனாதிபதி மாலைதீவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்வார் என்று கூறப்படுகிறது.

மாலைத்தீவு ஜனாதிபதி முகமது முய்சுவின் அழைப்பின் பேரிலேயே இந்தப் பயணம் நடைபெறவுள்ளது. (ஐ)



கண்டியில் புதிதாக நிறுவப்பட்ட மெழுகு அருங்காட்சியகத்தை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டார்...

# உரங்களின் விலை அதிகரிக்கிறது!

கொழும்பு, ஜூலை 26

உலக சந்தையில் உர விலைகள் அதிகரித்து வரும் நிலையில், உள்நாட்டில் உர விலைகளும் அதிகரித்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் உள்ள மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 2041ஆம் ஆண்டில் நாட்டில் 4 இல் ஒருவர் முதியவர்!

கொழும்பு, ஜூலை 26

2041 ஆம் ஆண்டுக்குள் இலங்கையில் 4 பொதுமக்களில் ஒருவர் முதியவராக இருப்பர் என்று கணிப்புகள் தெரிவிப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், நாட்டின் மக்கள் தொகை 2050ஆம் ஆண்டில் சுமார் 2.5 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தென்னக்கோன் பதவி நீக்கம் ஓகஸ்ட் 5ஆம் திகதி விவாதம்!

கொழும்பு, ஜூலை 26

பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து தேசபந்து தென்னகோனை நீக்குவதற்கான பிரேரணை தொடர்பில் ஓகஸ்ட் 05ஆம் திகதி விவாதிப்பதற்கு பாராளுமன்ற அலுவல்கள் குழு தீர்மானித்துள்ளது.

அதிகாரிகள் நீக்கல் (செயல்முறை) சட்டத்தின் 2002ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தின் கீழ், தற்போதைய பொலிஸ்மா அதிபரை அகற்றும் காரணங்களை விசாரிக்க மற்றும் அறிக்கையிட நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு, பொலிஸ் மாஅதிபர் பதவியிலிருந்து தேசபந்து தென்னகோனை நீக்க பரிந்துரைத்துள்ளதாக சபாநாயகர் கடந்த புதன்கிழமை சபைக்கு அறிவித்தார்.

விசாரணையின் முடிவில், குறித்த அதிகாரி மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் சட்டத்தின் பிரிவு 8(2) இற்கு அமைய குற்றவாளி என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்ட நிலையில், குற்றவாளி என்பது தொடர்பான தீர்மானம், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், இது குறித்து விவாதித்து விவாதிக்க நாளொன்று அறிவிக்கப்படும் என்றும் சபாநாயகர் தெரிவித்திருந்தார்.

இதற்கமைய எதிர்வரும் ஓகஸ்ட் 05ஆம் திகதி விவாதிக்க பாராளுமன்ற அலுவல்கள் குழு தீர்மானித்துள்ளது. (ஐ)

# எரிபொருள் விலையை குறைக்க புதிய முறைமை குறித்து கவனம்

கொழும்பு, ஜூலை 26

எரிபொருள்விலையை மேலும் குறைக்கும் திறன்கொண்ட புதிய முறைமை தொடர்பில் பெற்றோலிய கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இது எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கான பராமரிப்பு செலவுகளை குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

எரிபொருள் விநியோகத்துக்கு பயன்படுத்தப்படும் பவுஸர் வாகன உதிரி பாகங்களின் விலை மற்றும் ஏனைய பராமரிப்பு செலவுகளை குறைப்பதன் மூலம், இந்த செலவு முகாமைத்துவத்தை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது என்று பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிர்வாக பணிப்பாளர் மயூர நெத்திகுமார தெரிவித்தார்.

இதனை விநியோகஸ்தர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனால், விநியோக சங்கிலியில் ஏற்படும் செலவு குறைப்பின் பலன் நுகர்வோருக்கு வழங்கப்படும் - என்றார். (ஐ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன

## இப்படி சொல்கிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஜூலை 26

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை முற்றுமுழுதாக அரசியல் மயப்படுத்தியுள்ளனர். இந்த விசாரணைகளிலிருந்து மக்கள் திசை திருப்பப்பட்டுள்ளனர் - என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் நிலந்த ஜெயவர்த்தனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதனுடன் நேரடியாகத் தொடர்புடைய இப்ராஹிம் என்ற நபர் இன்னும் பொது வெளியில் சுதந்திரமாகவே நடமாடிக் கொண்டிருக்கிறார். பேசப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை முற்று முழுதாக அரசியல் மயப்படுத்தியுள்ளனர். இந்த விசாரணைகளிலிருந்து மக்கள் திசை திருப்பப்பட்டுள்ளனர். இந்த விவகாரம் இவ்வாறு அரசியல் மயப்படுத்தப்படுவது தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களை அவமரியாதைக்கு உட்படுத்துவதாகும்.

இன்று இந்த நாட்டில் பொது மக்கள் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகியுள்ளது. நாளாந்தம் ஏதேனுமொரு பகுதியில் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகின்றன. இவை பாதாள உலகக் குழுக்களின் செயல்பாடுகள் எனத் தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாத போதிலும் மக்கள் அச்சத்துடனேயே நடமாடுகின்றனர் - என்றார். (ஐ)

# துப்பாக்கிதாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்

கொழும்பு, ஜூலை 26

கொழும்பில் துப்பாக்கிச் சூட்டு முயற்சி சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் நபர் விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு - கஹதுடுவ - பஹலகம என்ற இடத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருடன் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திலேயே சந்தேகநபர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 18ஆம்திகதி தெகிவளை ரயில் நிலையம் அருகே ஒருவரை சுட்டுக் கொலை செய்ய முயற்சி இடம்பெற்றது. அது தோல்வியில் முடிவடைந்தது. இந்த நிலையில் சந்தேகநபர் குறித்து விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் மறைந்திருந்த வீட்டை விசேட அதிரடிப் படையினர் சுற்றி வளைத்தனர்.

இந்த நிலையில், வீட்டில் மறைந்திருந்தவர் விசேட அதிரடிப் படையினர் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளார். இதில், அதிரடிப் படையை சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். இதையடுத்து, அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் சந்தேகநபர் உயிரிழந்தார்.

இதேசமயம் இந்த சம்பவத்தில் காயமடைந்த விசேட அதிரடிப் படையை சேர்ந்த அதிகாரி களுபோவிலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜூலையை உருவாக்கியோரில் ரணில் மட்டுமே தற்போது இருக்கிறார்!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஜூலை 25

**யாழ்ப்பாணம் நூலகத்தை எரித்த, கறுப்பு ஜூலையை உருவாக்கிய அமைச்சரவையில் இருந்தவர்களில் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே இப்போது இருக்கிறார் - என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், கலவி மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பில் கதைக்கும்போது வெள்ளைப் பத்திரிகை தொடர்பில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அந்தப் பெயரை கூறும் போதே எமக்கு பயம் வருகின்றது. 1981 இல் ரணில் விக்ரமசிங்கவால் கொண்டுவரப்பட்ட வெள்ளை பத்திரிகையின் நோக்கம் முழுமையாகக் கருமையானது.

அந்த வெள்ளைப் பத்திரிகை மூலம் கறுப்பு வேலைத்திட்டங்களை கொண்டு வந்த ரணில் போன்றோரே யாழ்ப்பாணம் நூலகத்துக்குத் தீ வைத்தனர். கறுப்பு ஜூலையையும் ஏற்படுத்தினர். இப்போது அறகலய வழக்கிலும் ரணில் தோல்வியடைந்துள்ளார். கறுப்பு ஜூலையை உருவாக்கிய அப்போதைய அமைச்சரவையில் இருந்தவர்களில் தற்போதுள்ள ஒருவர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமே - என்றார். (ஐ)

# சபை முதல்வரின் கருத்துகளால் எனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்

## ரோஹினி குமாரி எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

மாத்தளை மனித புதைகுழியுடன் தொடர்புடைய கொலையாளிகளின் பிள்ளைகளும் தனியார் சித்திரவதை முகாம்களை நடத்தியவர்களும் இந்த பாராளுமன்றத்தில் இருக்கின்றனர் என்று சபை முதல்வர் வெளியிட்ட கருத்தால் தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரோஹினி குமாரி விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் சிறப்புரிமை பிரச்னையை எழுப்பி கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தலதா மாளிகை மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் கடந்த 23ஆம் திகதி என்னால் எழுப்பப்பட்ட கேள்வியின்போது இடைக் கேள்வியில் தலதா மாளிகைக்கு முன்னால் மூடப்பட்டுள்ள வீதியை திறக்காமை தொடர்பில் கேட்ட போது, அதற்கு இடையூறு ஏற்படும் வகையில் சபை முதல்வர் செயல்பட்டார். அவர் வெளியிட்ட கருத்தின் மூலம் என்மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

மாத்தளை மனித புதைகுழியில் 140 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. அந்த கொலைகாரர்களின் மகள்மார் இங்கே இருக்கின்றனர். அது தொடர்பில் விசாரணைகள் நடக்கின்றன. இங்குள்ளவர்களில் சிலர் தனியார் சித்திரவதை முகாம்களின் உரிமையாளர்கள். இதே வேளை, 1987, 88, 89 காலங்களில் ஐக்கிய தேசிய கட்சியின் எம்.பிக்கள் தனிப்பட்ட முகாம்களை வைத்திருந்தமை புதுமையான விடயம் அல்ல என்றும் கூறியிருந்தார். இந்த கருத்தில் குறிப்பிட்ட மாத்தளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய எம்.பி ஒருவரின் மகள் என்ற வகையில் நான் மட்டுமே இருக்கிறேன்.

அத்துடன், எதிர்க்கட்சியில் நானும் சமிந்திராணி கிரியெல்லவும் மட்டுமே இருக்கின்றோம். இதனால் இது என்னை இலக்காகக் கொண்டு செய்யப்பட்ட அரசியல் கருத்தாகவே பாரக்கிறேன். குறிப்பிட்ட கருத்து எனது தனிப்பட்ட பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலானது - என்றார். (ஐ)

# கல்வி ஓர் அடிப்படை உரிமையாக வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 26

காலாவதியான, பழைய முறைகளைப் பின்பற்றும், பாரம்பரிய கட்டமைப்புக்குள் மட்டுப்பட்ட கல்வி முறைமையே தற்போதுள்ளது. இது நம் நாட்டு மாணவர்களுக்கு செய்யும் மிகப் பெரிய அநீதியாகும். அதனால் உத்தேச புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கல்வியானது ஓர் அடிப்படை உரிமையாக அமைய வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“ஐக்கிய மக்கள் சக்தி கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக ஒரு வெள்ளை அறிக்கையைத் தயாரித்து, ஜனாதிபதி - பொதுத் தேர்தல்களின் போதும், பின்னர் வந்த தேர்தலிலும் முன்வைத்து - சமூக இணக்கப்பாட்டை எட்டிக்கொண்டது. அரசாங்கம் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் ஒரு வெள்ளை அறிக்கையை முன்வைக்கும் பட்சத்தில், அதன் ஊடாக சிறந்த கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் முற்போக்கான கல்விச் சீர்திருத்தத்தை நோக்கிச் செல்ல முடியுமாக இருக்கும்.

தற்போதைய அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி அரசமைப்புச் சீர்திருத்தங்களை முன்னெடுத்தால், நலன்புரி பொருளாதாரத்தின் முக்கிய அம்சங்களான கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், வாழும் உரிமை, பொருளாதாரம், சமூகம், கலாசாரம், மதம் மற்றும் அரசியல் போன்ற உரிமைகள் மனித மற்றும் அடிப்படை உரிமைகளாக அமையும் விதமாக இருக்க வேண்டும்.

கல்வியை ஸ்மார்ட்டான ஒன்றாக மாற்றும்போது ஸ்மார்ட் மாணவர், ஸ்மார்ட் இளைஞன், ஸ்மார்ட் குடிமகன், ஸ்மார்ட் நாடு உருவாகும். கல்வியில் வழக்கமான மனப்பாடம் செய்யும் கற்றல் முறையை இல்லாதொழித்து, நாடும் உலகமும் எதிர்கொண்டு பன்முக பிரச்னைகள் மற்றும் சவால்களுக்குத் தீர்வுகளை வழங்கக்கூடிய குடிமக்களை உருவாக்க வேண்டும் - என்றார். (ஐ)

# காணிகளை விடுவிக்க நடவடிக்கை

## அமைச்சர் சுசில்

கொழும்பு, ஜூலை 26

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் காணிப் பிரச்னைகளுக்கு விரைவான தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என காணி, நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் காதர் மஸ்தான் எம்.பிக்கு பதிலளிக்கும் விதமாகவே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 54 ஆயிரம் ஏக்கர், வவுனியாவில் 24 ஆயிரம் ஏக்கர், மன்னாரில் 2 ஆயிரம் ஹெக்ரெயர் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வன பாதுகாப்பு திணைக்களத்தால் அதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டுள்ளது.

தற்போது அது தொடர்பில் ஆரம்பகட்ட பேச்சே நடத்தப்பட்டுள்ளது என்பதால் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக மாவட்ட ரீதியில் குழுக்கள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் விரைவாக்கப்படும் - என்றார்.

# அரச திணைக்கள செயல்பாடுகளால் பல ஏக்கர் காணிகள் தரிசாகின்றன!

## வன்னியிலேயே இந்நிலை என்கிறார் மஸ்தான் எம். பி.

கொழும்பு, ஜூலை 26

வனவளம், வன ஜீவராசிகள் திணைக்களங்களின் அத்துமீறிய செயல்பாடுகளால் நூற்றுக் கணக்கான குளங்கள், இலட்சக் கணக்கான ஏக்கர் விவசாய காணிகள் பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ளன. சாதாரண மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு இந்தக் காணிகளை விடுவிக்க அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவர் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காணிச் சட்ட நியதிகளுக்கு முரணாக கடந்த காலத்தில் வன ஜீவராசிகள் திணைக்களமும் வனவளத் திணைக்களமும் தான் தோன்றித்தனமாக வர்த்தமானி வெளியிட்டுள்ளன. இதனால் பல ஆண்டுகளாக இடம் பெயர்ந்தவர்கள் தமது காணியை எல்லையிட முன்னதாகவே இந்தத் திணைக்களங்கள் அத்துமீறி செயல்பட்டுள்ளன. பல இடங்கள் வர்த்தமானி பத்திரம் வெளியிடாதபோதும்கூட பொது மக்கள்தமது காணியில்விவசாயத்தை மேற்கொள்ளும் போது கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தப் படுகின்றனர். நீதிமன்றமும் இதன் உண்மைத் தன்மையை ஆராயாமல் இருப்பது வேதனைக்குரிய விடயம். இதனால் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுகிறது - என்றார். (ஐ)

### இளைஞர் சேவை மன்ற வர்த்தமானி

# “மலையக பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும் அபாயநிலை”

கொழும்பு, ஜூலை 26

ஒரு கிராமசேவகர் பிரிவில் ஒரு விளையாட்டுக்கழகம் மாத்திரமே பதிவு செய்ய முடியும் என்ற இளைஞர் சேவை மன்றத்தின் வர்த்தமானி அறிவிப்பால் மலையக பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. இதனால் அரசாங்கம் இந்த வர்த்தமானி அறிவிப்பை மீளப் பெறவேண்டும் என்று ஜீவன் தொண்டமான் எம். பி. தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர்,

மலையக தோட்டப்புறங்களில் 1947 முதல் 1977 வரை இலவச கல்வி மறுக்கப்பட்டிருந்தது. பெருந்தோட்ட நிறுவனங்களால் நடத்தப்பட்ட பாடசாலைகளில் 5ஆம் தரம் வரையிலே கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. என்றாலும் அரசியல் தலைவர்களின் அழுத்தங்கள் காரணமாக 1977இல் தோட்ட பாடசாலைகள் அரசாங்கத்துக்கு கீழ் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. ஆனால், இன்றும் அங்கு உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. தற்போது இளைஞர் சேவை மன்றம் வர்த்தமானி அறிவிப்பொன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அதில், இளைஞர் சேவை மன்றத்தின் யாப்பின் பிரகாரம் தோட்டப்புறமாக இருந்தாலும் கிராமப்புறமாக இருந்தாலும் விளையாட்டு கழகங்களை பதிவு செய்ய முடியும். ஆனால், தற்போது வெளியிடப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவிப்பில், ஒரு கிராம சேவகர் பிரிவில் ஒரு விளையாட்டு கழகமே பதிவு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யும்போது எமது பிரதிநிதித்துவம் இல்லாமல் போகும் அபாயம் உள்ளது - என்றார்.

# போதைப்பொருள் வழக்குகள் தாமதம் ஆளணி வளப்பற்றாக்குறையே காரணம்!

## நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார

கொழும்பு, ஜூலை 26

போதைப் பொருள் சம்பந்தமான வழக்குகளுக்கு இரசாயன பகுப்பாய்வு அறிக்கை அவசியம். இரசாயன பகுப்பாய்வு பிரிவில் நிலவும் ஆளணி பற்றாக்குறையாலேயே வழக்குகள் தாமதமாகின்றன என்று நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் முஜிபுர் ரஹ்மான் எம். பியின் கேள்விக்கு பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “நாட்டில்கொரோனா பரவியபோது சிறைக் கைதிகளின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. குறைந்தளவில் போதைப் பொருளை வைத்திருந்து கைதானோரை விடுவிப்பது என்று கொள்கை ரீதியான முடிவு எடுக்கப்பட்டது. அதுவும்கூட இரசாயன பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு இல்லாமல் எவரையும் விடுவிக்க முடியாது.

போதைப்பொருள் சட்டத் திருத்தத்தின்படி 10 கிராம் போதைப் பொருளுக்கு அதிகம் என்றால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டும். தற்போது பிரச்னை என்னவென்றால், இரசாயன பகுப்பாய்வு சோதனை அறிக்கை கிடைக்கும் வரை எந்த நீதிமன்றம் என்பதைக்கூட தெரிவு செய்ய முடியாத நிலைமை உள்ளது. இந்த சிக்கல்களுக்கு இரசாயன பகுப்பாய்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதே வழி.

அண்மையில், 6 ஆயிரம் பேர் போதைப்பொருள் தொடர்பில் கைது செய்யப்பட்டனர். அவர்களின் வழக்கு விசா ரணைகள் முன்னெடுக்கப்படுவதற்கும் ஏனைய வழக்குகள் தாமதமாகவும் இரசாயன பகுப்பாய்வு அறிக்கை தாமதம் காரணமாகிறது.

இதனால், இரசாயன பகுப்பாய்வு பிரி வுக்கு மேலு ம் 32 பேரை நிய மிப்பதற்கு அமைச்சரவை அனு மதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு சம்பந்தப்பட்ட செயல்பாடுகளை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லியல் சின்னங்களை அடையாளப்படுத்த திட்டம்

## வெற்றுக் காணிகள் விடுவிக்கப்படும்

வெருகல், ஜுலை 26

**திருகோணமலை மாவட்டம், வெருகல் வட்டவன் பகுதியில் விவசாயிகளின் நெற் செய்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தொல்லியல் சின்னங்கள் பாதுகாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதேவேளை, கல்லடியில் வெற்றுக் காணிகளாக இருக்கின்ற பகுதி எல்லைக் கற்கள் அகற்றப்பட்டு விடுவிக்கப்படும் எனவும் பிரதேச செயலாளரால் பிரதி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெருகல் பிரதேசத்தின் வட்டவன் மற்றும் கல்லடி பகுதிகளில் தொல்பொருள் திணைக்களத்தால் தொல்லியல் சின்னங்களை அடையாளப் படுத்தும் நடவடிக்கை நேற்று முன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கடந்த 17ஆம் திகதி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் குழு கூட்டத்தின் தீர்மானத்துக்கு அமைய, பிரதேச சபை தவிசாளர் சே. கருணாநிதி, பிரதேச செயலாளர் ஏ. அனஸ், உதவி பிரதேச செயலாளர் திருமதி. துசிதீபா, தொல்பொருள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் யு. எஸ். பெரேரா, பிரதேச சபை செயலாளர் சாந்தகுமார், குடியேற்ற உத்தியோகத்தர் ந. கஜகோகுலன், உதவி வன ஜீவராசிகள் உத்தியோகத்தர் பி. ஜெகதீஸ்வரன் ஆகியோர் இந்த செயல்பாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் பிரதேச அபிவிருத்திக் குழு தலைவரும் பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திரவுக்கு அறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தொல்பொருள் சார்ந்த இடமான வட்டவன் பகுதியில் பிரதான வீதிக்கு சுமார் ஒரு கிலோ மீற்றரில் பாலக்காட்டு பகுதியில் உள்ளோக்கி செல்லும்போது மலைத்தொடர் காணப்படுகின்றது. இம்மலை தொடரில் அண்ணளவாக 12 இடங்களில் தொல்பொருள் அடையாளங்களான புராதன எழுத்துக்களும் குகைகளும் காணப்படுவதை அவதானிக்க முடிந்தது. தொல்பொருள் அடையாளப்படுத்தப்பட்ட மலைத் தொடரை சுற்றியுள்ள எல்லைப் பிரதேசங்களில் தொல்லியல் அடையாளங்களை பாதுகாக்கும் அதேவேளை நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது

பொத்துவில், ஜுலை 26

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருகமலே பகுதியில் விசேட அதிரடிப்படை சிரஸ் தாவெல முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் நேற்று முன்தினம் சோதனை நடத்தினர்.

இதன்போது உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் 02 வெற்று குண்டுகளுடன் சந்தேக நபரைக் கைது செய்து பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

கைதான சந்தேக நபர் பொத்துவில் 05 ஐச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்கவர் ஆவார்.

மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-01)

# இரவுநேர துரித உணவு விற்பனை நிலையங்களில் திடீர் சோதனை

கல்முனை, ஜுலை 26

அம்பாறை மாவட்டம் கல்முனை - சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள இரவு நேர துரித உணவு விற்பனை நிலையங்கள், கிழங்குப் பொரி விற்பனை நிலையங்கள் நேற்று முன்தினம் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

நான்கு குழுக்களாக இணைந்து நடத்திய இந்தச் சோதனையில் 39 உணவகங்கள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது மனித நலனுக்கு ஏற்புடையதல்லாத மற்றும் சுகாதார நெறிமுறைகளை பின்பற்றாமல் உணவுகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட, சட்ட விரோதமாகக் களஞ்சியப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் தூய்மையற்ற பாத்திரங்கள் பெருமளவில் கைப்பற்றப்பட்டு சட்ட நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

# 12 உணவகங்களுக்கு எதிராக கிண்ணியாவில் வழக்கு

கிண்ணியா, ஜுலை 26

கிண்ணியாவில் 12 உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையின் போதே இந்த உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி எம். அஜித் தெரிவித்தார்.

உணவு ஒவ்வாமை காரணமாக கடந்த 23ஆம் திகதி ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து, திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம். அஜித் தலைமையிலான குழுவினர் உணவகங்களை பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப்பொருட்கள் வைத்திருந்தவர்கள், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக 20 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன. (எ-06)

# காரைதீவில் தீ மிதிப்பு



காரைதீவு, ஜுலை 26

அம்பாறை மாவட்டம், காரைதீவு அருள்மிகு சிறீ பத்திர காளி அம்மன் ஆலய வருடாந்த தீ மிதிப்பு வைபவம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (எ- 08)


# விருது விழா

சாய்ந்தமருது, ஜுலை 26

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டை முன்னிட்டு மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் பல்துறை சார்ந்தோருக்கான திறமைக்கு மரியாதை விருது விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு சாய்ந்தமருது வொலிவேரியன் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவும் முன்னாள் பிரதி அமைச்சர் எஸ். நிஜாமுதீன் மற்றும் பிரதேச செயலாளர் எம். ஆஷிக் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)

# உகந்தைமலையில் கொடியேற்றம்



காரைதீவு, ஜுலை 26

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றம் நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (எ-08)

# கிழக்கு மாகாணத்தில் கல்வித்தரம் மிகமோசம்

கொழும்பு, ஜுலை 26

கிழக்கு மாகாணம் உட்பட ஏனைய பல பாடசாலைகளில் அதிபர்கள் இல்லாததனால் கல்வித் தரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

எமது நாட்டில் சுமார் முப்பது வருடங்களுக்கு மேல் பழைய கல்வித் திட்டம் பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் தற்போதும் நடைமுறையில் உள்ளது. உலகின் பல நாடுகள் தங்களின் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வித் திட்டங்களில் பல்வேறு திருத்தங்களை மேற்கொண்டு வரும் நிலையில் நாம் இன்னும் அதே பழைய கல்வித் திட்டத்தில் இருந்து வருகிறோம் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

“கிழக்கு மாகாணம் உட்பட ஏனைய பல பாடசாலைகளில் அதிபர்கள் இல்லாததனால், கல்வித் தரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

இந்த விவகாரத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதோடு, அதிபர் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மிக விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானது.

அதேபோன்று, அதிபர்களுக்கு மேலதிகமான எந்தக் கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை. ஆசிரியர்கள், அதிபர்களை விட அதிக சம்பளம் பெறும் நிலை காணப்படுகிறது.

இதனால் அதிபர் பதவியை பொறுப்பேற்க எவரும் தயார் இல்லாத நிலை உருவாகியுள்ளது. எனவே, அவர்களுக்கான விசேட கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக பாடத்திட்டங்களிலும் மாற்றங்களை கொண்டுவர வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள பாடத்திட்டங்கள் மிகப் பழையவை.

அவற்றை நவீன காலத்துக்கு ஏற்ப மாற்றி, மாணவர்களின் திறனுக்கும் தொழில்நுட்பத் தேவைகளுக்கும் ஏற்றவாறு மேம்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவில் பயணிகள் விமானம் தீப்பிடித்ததில் 50 பேர் உயிரிழப்பு

மொஸ்கோ, ஜூலை 26

**ரஷ்யாவில் பயணிகள் விமானம் திடீரென விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 50 பேரும் உயிரிழந்தனர்.**

சைபீரியாவிலிருந்து இயக்கப்படும் ரஷ்யாவின் அங்காரா ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான ஏ என்-24 ரக பயணிகள் விமானம், ரஷ்யாவின் பிளாகோ வெஷ்சென்ஸ்க் நகரிலிருந்து, ரஷ்யாவின் அமுர் பகுதியில் உள்ள டிண்டா நகருக்கு நேற்று முன்தினம் புறப்பட்டது. இதில் 5 குழந்தைகள் உட்பட 44 பயணிகளும் 6 விமான ஊழியர்களும் பயணம் செய்தனர்.

டிண்டா நகரை நோக்கிச் சென்ற விமானம் திடீரென விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அறையின் ரேடாரிலிருந்து மறைந்து, தொடர்பு துண்டானது. இதையடுத்து அந்த விமானத்தை தேடும் பணியில் மீட்பு ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டன. அப்போது டிண்டா நகரிலிருந்து 16 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அமுர் வனப் பகுதிக்குள் விமானம் விழுந்து தீப்பிடித்துக் கொண்டிருந்தது கண்டறியப்பட்டது.

இதையடுத்து மீட்புக் குழுவினர் அங்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். விமானத்தில் பயணம் செய்த 50 பேரும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விமான விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

# கம்போடியாவில் சைபர் மோசடி

## 105 இந்தியர்கள் கைது

நாம்பென், ஜூலை 26

கம்போடியாவில் சைபர் மோசடி தொடர்பில் 15 நாட்களில் 138 இடங்களில் தீவிர சோதனை நடத்தப்பட்டது. இந்தச் சோதனையில் 3,000இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இதில், 105 இந்தியர்களும் 606 பெண்களும் அடங்குவர்.

இந்தியர்களைத் தவிர, 1028 சீனர்களும் 693 வியட்நாமியர்கள், 366 இந்தோனேஷியர்கள், 101 பங்களாதேஷவர்கள், 31 பாகிஸ்தானியர்களும் 82 தாய்லாந்து நாட்டவர்களும் கைதாகியுள்ளனர்.

இந்த சோதனைகளின் போது கணினிகள், மடிக்கணினிகள், அதிநவீன தொலைபேசிகள், இந்திய மற்றும் சீன பொலிஸ் துறையினரின் போலிச் சீருடைகள், போதைப்பொருள் பதப்படுத்தும் உபகரணங்கள், ஆயுதங்கள், வெடிமருந்துகள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன.

# "தீவிரவாதத்துக்கு எதிராக இரட்டை நிலைப்பாடு கூடாது"

லண்டன், ஜூலை 26

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் ஒருபோதும் இரட்டை நிலைப்பாடு இருக்கக் கூடாது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

லண்டலின் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"இங்கிலாந்து - இந்தியா இடையிலான தடையற்ற ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்தியாவின் குருகிராமில் சவுத்ஆம்டன் பல்கலைக்கழகத்தின் கிளை கடந்த வாரம் இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது. இங்கிலாந்தின் 6 பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் தங்கள் வளாகங்களை அமைக்கவுள்ளன. இங்கிலாந்தில் இந்திய வேளாண் விளை பொருட்கள், உணவு வகைகள், துணி ரகங்கள், காலணிகள், நகைகள், வைரங்கள், கடல் உணவுகள், பொறியியல் பொருட்களும், இந்தியாவில் இங்கிலாந்தின் மருத்துவ உபகரணங்கள், விமான உதிரிப் பாகங்களும் குறைந்த விலைக்கு கிடைக்கும்.



பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த இங்கிலாந்து பிரதமர் ஸ்மார்மருக்கு நன்றி. தீவிரவாதத்துக்கு எதிரான போரில் ஒருபோதும் இரட்டை நிலைப்பாடு இருக்கக் கூடாது. ரஷ்யா - உக்ரைன் போருக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். மத்திய கிழக்கில் நிலவும் குழப்பங்களுக்கு சுமுக தீர்வு காணப்பட வேண்டும்.

இந்தியா - இங்கிலாந்து இடையே முக்கிய உறவு பாலமாக கிரிக்கெட் திகழ்கிறது. இரு நாட்டு மக்களும் இதைப் பெரிதும் நேசிக்கின்றனர். அரசு முறை பயணமாக இந்தியா வருமாறு இங்கிலாந்து பிரதமர் ஸ்டார்மருக்கு அழைப்பு விடுக்கிறேன்"- என்றார். (எ)


# இங்கிலாந்து- இந்தியா இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

லண்டன், ஜூலை 26

அரசுமுறை பயணமாக இங்கிலாந்து சென்றுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, லண்டனில் அந்த நாட்டு பிரதமர் கெய்ர் ஸ்டார்மரை சந்தித்தார். அப்போது, இவர்கள் முன்னிலையில் இரு நாடுகள் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது.

பிரதமர் மோடி 2 நாள் பயணமாக 23ஆம் திகதி இங்கிலாந்து தலைநகர் லண்டன் சென்றார். அங்கு அந்த நாட்டு பிரதமர் கெய்ர் ஸ்டார்மரை நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். அப்போது, இரு நாடுகள் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. பின்னர், இரு தலைவர்களும் செய்தியாளர்களை சந்தித்தனர்.

பிரதமர் மோடி கூறுகையில், "இது வரலாற்று சிறப்புமிக்க தினம். நீண்ட பேச்சுவார்த்தைக்கு பிறகு தற்போது இந்தியா - இங்கிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன்மூலம் இரு நாடுகள் இடையிலான



பொருளாதார ஒத்துழைப்பு அதிகரிக்கும். இந்தியாவில் குறு, சிறு, நடுத்தர தொழில்கள் வளர்ச்சி அடையும். இந்திய இளைஞர்கள், விவசாயிகள் பயனடைவார்கள். இரு நாடுகளிலும் எளிதாக வணிகம் தொடங்குவதற்கு ஏற்ற சூழல் உருவாகும்"- என்றார்.

இங்கிலாந்து பிரதமர் ஸ்டார்மர் கூறுகையில், "இந்தியா - இங்கிலாந்து இணைந்து, 2035ஆம் ஆண்டில் எட்டுவதற்கான புதிய இலட்சிய இலக்கை நிர்ணயித்துள்ளோம். தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் இருநாடுகள் இடையே வணிகம் அதிகரிக்கும், வர்த்தக உறவுகள் எளிதாகும். புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். சொகுசு கார்கள், மின்னணு சாதனங்கள், மருத்துவ உபகரணங்கள் உட்பட பல்வேறு பொருட்களின் விலை குறையும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு இந்திய அரசு தற்போது விதிக்கும் 15 சதவீத வரி, 3 சதவீதமாக குறையும்"- என்றார். (எ)

# இந்தியர்களை இனிமேல் வேலைக்கு எடுக்கக்கூடாது

## கூகுள், அப்பிள் நிறுவனங்களுக்கு அமெ. ஜனாதிபதி ட்ரம்ப் மிரட்டல்

வாஷிங்டன், ஜூலை 26

இந்தியர்களை இனிமேல் வேலைக்கு எடுக்கக் கூடாது என்று கூகுள், அப்பிள் நிறுவனங்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

கூகுள், மைக்ரோசொப்ட் உள்ளிட்ட நிறுவனங்களில் இந்தியர்கள் அதிகம் பணியாற்றி வரும் நிலையில், ட்ரம்ப் அந்த நிறுவனங்களுக்கு மிகக்கடுமையான அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார். வாஷிங்டனில் நடைபெற்ற ஏஐ உச்சி மாநாட்டில் உரையாற்றிய ட்ரம்ப் கூறியதாவது, "நீண்ட காலமாக அமெரிக்காவின் தொழில்நுட்பத் துறை தீவிரமான உலகமயமாக்கலைப்



பின்பற்றியது.

மற்ற நாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் இந்த நடைமுறை, இலட்சக்கணக்கான அமெரிக்கர்களை பாதித்தது. அமெரிக்காவின் மிகப்பெரிய தொழில் நுட்ப நிறுவனங்கள், சீனாவில் தொழிற்சாலைகளை நிறுவி அவற்றில் இந்தியாவிலிருந்து பணியாளர்களை வேலைக்கு அமர்த்தி அமெரிக்காவின் சுதந்திரத்தை சீர்குலைத்துள்ளன. அதேநேரத்தில் அமெரிக்கர்களை பணிநீக்கம் செய்ததும் நடைபெற்றது. கூகுள், மைக்ரோசொப்ட், அப்பிள் போன்ற நிறுவனங்கள், அமெரிக்கா வழங்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்தி அதிக இலாபத்தை ஈட்டுகின்றன. இனி அது நடக்காது. அமெரிக்க நிறுவனங்கள் சீனாவில் தொழிற்சாலைகளைக் கட்டுவதையும், இந்தியர்களை வேலைக்கு எடுப்பதையும் விட்டு விட்டு, உள்நாட்டில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்"- என்றார். (எ)

# தாய்லாந்து - கம்போடியா இராணுவத்தினர் மோதல்

## 9 பேர் உயிரிழப்பு

பாங்கொக், ஜூலை 26

தாய்லாந்து - கம்போடியா இராணுவத்தினர் இடையே திடீரென ஏற்பட்ட மோதலில் 9 பேர் பலியாகினர்.

கம்போடியா மற்றும் தாய்லாந்து எல்லைப்புற மாகாணங்களைச் சேர்ந்த 14 பேர் காயமடைந்தனர்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளான தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகள் இடையே கடந்த மே மாதத்தில் மோதல் போக்கு ஏற்பட்டது. இதனால், இரு நாடுகளின் இடையேயும் பதற்றம் தொற்றியது.

இந்தச் சூழலை தேசியவாதிகள் பெரிதுபடுத்தினர். இதனால், பதற்றம் இன்னும் அதிகரித்தது. இந்த நிலையில், இரு நாடுகளைச் சேர்ந்த இராணுவத்தினரும் எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் மோதிக் கொண்டனர். துப்பாக்கி சூடும் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மக்களில் 9 பேர் பலியாகினர். இதுபற்றி தாய்லாந்து இராணுவம் வெளியிட்ட செய்தியில், அதிக அளவாக சிசா கெத் மாகாணத்தில் பலி எண்ணிக்கையுள்ளது. இதில், எரிவாயு நிலையத்தில் துப்பாக்கிச் சூடு நடந்ததில், 6 பேர் பலியாகினர். 3 எல்லைப்புற மாகாணங்களை சேர்ந்த 14 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அபார வெற்றி

## ரி - 20 தொடர் பங்களாதேஷ் அணி வசம்

டாக்கா, ஜூலை 26

3ஆவது போட்டியில் 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி அபார வெற்றி பெற்றது.

இதேவேளை, பாகிஸ்தானுக்கு எதிரான ரி - 20 தொடரை பங்களாதேஷ் அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.


பாகிஸ்தான் கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது. இதில் நடைபெற்ற முதல் 2 போட்டிகளின் முடிவிலேயே பங்களாதேஷ் 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றிவிட்டது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ரி - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடியது. குறிப்பாக தொடக்க ஆட்டக்காரர் சாஹிப் சாதா பர்ஹான் பங்களாதேஷ் பந்துவீச்சை வெளுத்து வாங்கினார். வெறும் 41 பந்துகளில் 63 ஓட்டங்கள் அடித்த நிலையில் பர்ஹான் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய வீரர்களில் ஹசன் நவாஸ் (33 ஓட்டங்கள்), முகமது நவாஸ் (27 ஓட்டங்கள்) ஆகியோரின் கணிசமான ஒத்துழைப்புடன் பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 178 ஓட்டங்கள் அடித்தது.




பின்னர் 179 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் அணி, பாகிஸ்தான் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் விக்கெட்களை தாரை வார்த்தது. அந்த அணியில் முகமது சாய்புதின் (35 ஓட்டங்கள்) தவிர மற்ற வீரர்கள் யாரும் 20 ஓட்டங்களை கூட தொடவில்லை. இறுதியில் 16. 4 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த பங்களாதேஷ் அணி 104 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அபார வெற்றி பெற்றது. பாகிஸ்தான் தரப்பில் சல்மான் மிர்சா 3 விக்கெட்களும், பஹீம் அஷ்ரப் மற்றும் முகமது நவாஸ் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

ஏற்கனவே தொடரை இழந்து விட்ட பாகிஸ்தானுக்கு இது ஆறுதல் வெற்றியாக அமைந்தது. இதன் மூலம் பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. பங்களாதேஷ் வீரர் ஜேக்கர் அலி தொடர் நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (எ)



# வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ்: காலிறுதியில் பென் ஷெல்டன்

வாஷிங்டன், ஜூலை 26

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடரில் பென் ஷெல்டன் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அமெரிக்காவின் முன்னணி வீரரான பென் ஷெல்டன், கனடாவின் கேப்ரியல் டயல்லோ உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பென் ஷெல்டன் 6-3, 6-2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.




# முத்தரப்பு ரி - 20 தொடரில் நியூசிலாந்து அணி வெற்றி

ஹராரே, ஜூலை 26

சிம்பாவேக்கு எதிரான போட்டியில் 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

சிம்பாவே, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆகிய 3 நாடுகள் இடையிலான முத்தரப்பு ரி - 20 கிரிக்கெட் தொடர் சிம்பாவேயின் ஹராரே நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா இரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறும். இதன்படி தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து அணிகள் ஏற்கனவே இறுதிப்போட்டிக்கு முன்னேறி விட்டன.

இந்தச் சூழலில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து - சிம்பாவே அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 190 ஓட்டங்கள் எடுத்தது.

நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ரிம் செய்பர்ட் 75 ஓட்டங்கள் எடுத்தார். தொடர்ந்து 191 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய சிம்பாவே 18. 5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 130 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன் மூலம் 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றி பெற்றது. சிம்பாவே தரப்பில் அதிகபட்சமாக முனியாங்கோ 40 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் இஷ் சோதி 4 விக்கெட்கள் வீழ்த்தினார். (எ)

# 4 ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி ஆதிக்கம்


மான்செஸ்டர், ஜூலை 26

இங்கிலாந்து அணி 46 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 225 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் நடைபெற்று வருகிறது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தொடக்க நாளில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 264 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஜெய்ஸ்வால் (58 ஓட்டங்கள்), சாய் சுதர்சன் (61 ஓட்டங்கள்) அரைச்சதம் அடித்தனர்.

இந்த நிலையில் 2ஆவது நாளான நேற்று முன்தினம் இந்திய வீரர்கள் தொடர்ந்து துடுப்பாட்டம் செய்தனர். ஆக்ரோஷமாக பந்து வீசிய இங்கிலாந்து வீரர்கள் கடும் நெருக்கடி கொடுத்தனர். இதனால் ஓட்டம் எடுப்பதில் இந்திய வீரர்கள் தடுமாறினர். ஜடேஜா (20 ஓட்டங்கள்) ஜோப்ரா ஆர்ச்சர் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து ஷர்துல் தாக்கூருடன், வாஷிங்டன் சுந்தர் இணைந்தார். நிதானமாக ஆடிய இவர்கள் ஒட்ட எண்ணிக்கை 300-ஐ தாண்ட வைத்தனர்.

ஷர்துல் தாக்கூர் 41 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் ரிஷப் பண்ட், வலியையும் பொருட்படுத்தாமல் நொண்டியபடி களத்துக்கு மெதுவாக வந்தார். அவரது வருகையை கண்டு உற்சாகமடைந்த இந்திய ரசிகர்கள் கைதட்டி ஆரவாரமான வரவேற்பு அளித்தனர். ரிஷப் பண்ட், வேகமாக ஓட முடியாது என்பதால் பெரும்பாலும் பந்தை எல்லைக்கோட்டுக்கு விரட்டுவதிலேயே கவனம் செலுத்தினார். ஆர்ச்சரின் ஓவரில் சுப்பராக ஒரு சிக்ஸர் தூக்கினார். ஆனாலும் அவரால் நீண்ட நேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அரைச்சதத்தை கடந்த ரிஷப் பண்ட் (54 ஓட்டங்கள்), ஜோப்ரா ஆர்ச்சரின் பந்து வீச்சில் விக்கெட்டை பறிகொடுத்தார்.



முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 114.1 ஓவர்களில் 358 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இங்கிலாந்து தரப்பில் பென் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்களை வீழ்த்தினார். அவர் ஓர் இன்னிங்ஸில் 5 விக்கெட்கள் எடுப்பது இது 5ஆவது முறையாகும். மற்றொரு வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

அடுத்து முதல் இன்னிங்ஸை இங்கிலாந்து வீரர்கள் அதிரடியாக தொடங்கினர். இந்திய பந்து வீச்சை சர்வசாதாரணமாக நொறுக்கிய பென் டக்கெட்டும் ஜாக் கிராவ்லியும் துரிதமாக ஓட்டங்கள் திரட்டினர். வலுவான அஸ்திவாரம் போட்ட இவர்கள் 166 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பிரிந்தனர். ஜாக் கிராவ்லி 84 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பென் டக்கெட் 94 ஓட்டங்களில் அறிமுக வீரர் அன்ஷுல் கம்போஜியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

இரண்டாவது நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 46 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 225 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஆலி போப் (20 ஓட்டங்கள்), ஜோ ரூட் (11 ஓட்டங்கள்) களத்தில் இருந்தனர். (எ)

# ஜேர்மன் அணியை வீழ்த்தி இறுதிக்குள் ஸ்பெயின் அணி

சூரிச், ஜூலை 26

ஜேர்மன் அணியை வீழ்த்தி முதல் முறையாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது ஸ்பெயின் அணி.

14ஆவது மகளிர் ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டி (யூரோ) சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் சூரிச்சில் நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் உலக சம்பியனான ஸ்பெயின் அணி, 8 முறை ஐரோப்பிய சம்பியனான ஜேர்மனியை எதிர்கொண்டது.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஸ்பெயின் அணியினர் பந்தை தங்கள் கட்டுப்பாட்டில் அதிக நேரம் வைத்து ஆதிக்கம் செலுத்தியதுடன் தாக்குதல் ஆட்டத்திலும் தீவிரம் காட்டினர். இருப்பினும் அவர்களால் ஜேர்மனி அணியின் தடுப்பு அரணை தகர்க்க முடியவில்லை. ஸ்பெயின் அணியில் எஸ்தர், பினா ஆகியோர் முதல் பாதியில் கோல் அடிக்க எடுத்த முயற்சியை ஜேர்மனியின் கோல் காப்பாளர் பெர்ஜர் முறியடித்தார். 41ஆவது நிமிடத்தில் மற்றொரு ஸ்பெயின் வீராங்கனை பாரிடிஸ் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு மயிரிழையில் வெளியேறியது.

வழக்கமான நேரத்தில் (90 நிமிடம்) இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காததால் ஆட்டம் சமனில் முடிந்தது.

இதனால் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க கூடுதல் நேரம் (30 நிமிடம்) ஒதுக்கப்பட்டது. இதில் 113ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீராங்கனை போன்மதி அருமையாக கோல் அடித்தார். முடிவில் ஸ்பெயின் அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனியை தோற்கடித்து முதல் முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த ஞாயிறு...

பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேநேரம், ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் ஊடாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது மாத்திரமின்றி, நீதிமன்றங்களில் வெவ்வேறு தரப்புகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பான நீதிமன்ற விசாரணைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான பின்னணியில், விசாரணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய தங்களின் கடமைகளுக்கு புறம்பாக செயல்பட்ட அதிகாரிகள் தொடர்பான விசாரணைகள் இடம் பெறுவதுடன் இரகசிய தன்மையைக் கருத்தில் கொண்டு அது குறித்த விவரங்களை வெளிப்படுத்த முடியாது. அத்துடன், விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்து சட்டமாஅதிபரால் சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகளுக்கு அமைய கடமை தவறிய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோன்று அவ்வாறான அதிகாரிகள் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் பணியாற்றினால், அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று பிரதமர் கூறினார்.

இதனையடுத்து இடையீட்டு பிரச்னையை எழுப்பிய பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி, ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய சாரா, காணாமல் ஆக்கப்படவுள்ளார் என்று முன்னரே தகவல் வெளியானது. அந்த சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாண கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகர பணியாற்றினார். அவ்வாறாயின், சாரா தற்கொலை குண்டு தாக்குதலை நடத்தினாரென கூறப்பட்டதன் பின்னர் அங்கு விசாரணைக்கு சென்ற குழு தொடர்பில் அவர் அறிந்திருக்க வேண்டும். எனவே, சாராவுக்கு என்ன நடந்தது என்பது கிழக்கு மாகாண கட்டளை அதிகாரியாகச் செயல்பட்ட அருண ஜெயசேகரவுக்கு தெரிந்திருக்கும். அந்த அருண ஜெயசேகர தற்போதைய அரசாங்கத்தில் பிரதி அமைச்சராக உள்ளார். இதன்படி, தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இடம் பெறும் விசாரணைகளை எவ்வாறு நம்ப முடியும் - என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, அரசாங்கம் என்ற வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என்று குறிப்பிட்டார்.

இதையடுத்து, பிரதமரிடம் கேள்வி எழுப்பிய பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், "சாய்ந்தமருது பகுதியில் குண்டு வெடிப்பு பதிவானதுடன், அதன் பின்னர் முதலாவது இராணுவ விசாரணைக் குழு அங்கு சென்றது. அந்த முதலாவது விசாரணைக் குழு அங்கு சென்றதன் பின்னரே, சாரா உயிருடன் உள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன் அங்கு உயிரிழந்தவர்களின் மரபணு பரிசோதனைகளில் மூன்றாவது முறையாக நடத்தப்பட்ட பரிசோதனையில் பிரச்னை உள்ளதாக அரசாங்கமும் அறிவித்துள்ளது. இதன்படி, சாரா அங்கிருந்து வெளியேற்றப்பட்டார் என்பது உறுதியாகிறது. அங்கு முதலில் விசாரணைக்கு சென்ற அதிகாரிகள் தொடர்பில் ஆராயப்பட வேண்டும். எனினும் அந்த பகுதிக்குப் பொறுப்பாக இருந்த கட்டளை அதிகாரி தற்போது பிரதி அமைச்சராக உள்ளார். அவரின் கீழ் விசாரணைகள் நடைபெறுகின்றன. அவ்வாறாயின் அவரின் கீழ் நடைபெறும் விசாரணைகள் எப்படி நீதியான விசாரணையாக இருக்க முடியும் - என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, "2019ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே தாக்குதல் நடத்தப்பட்டது. அருண ஜெயசேகர தற்போதே பிரதி அமைச்சராக பணியாற்றுகிறார். 2019 முதல் 2022 வரை அருண ஜெயசேகர பிரதி அமைச்சராக இருக்கவில்லை என்ற அடிப்படையில், இந்த இடைப்பட்ட காலப்பகுதியில் ஆட்சியில் இருந்தவர்கள் நீதியான விசாரணையை நடத்தத் தவறி விட்டனர். எனினும், அரசாங்கம் என்ற வகையில் உரிய விசாரணைகள் நடைபெறும். இந்த விடயத்தில் குழப்பமடைய வேண்டிய அவசியமில்லை - என்றார்.

இதன்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால கருத்துரைக்க முயன்றபோது சபையில் குழப்பம் ஏற்பட்டது. (ஐ)

## சிறுமியிடம்...

பாதிக்கப்பட்ட சிறுமி கடந்த சனிக்கிழமை கடை ஒன்றுக்கு யூஸ் பைக்கெற் வாங்குவதற்காக சென்றுள்ளார். சிறுமியை கடையின் உள்ளே அழைத்த 62 வய தான கடை உரிமையாளர், குளிரூட்டியிலிருந்து யூஸ் பைக்கெற்றை எடுக்குமாறு கூறியுள்ளார்.

சிறுமி குளிரூட்டியிலிருந்து யூஸ் பைக் கெற்றை எடுக்கமுயன்றபோது அவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார்.

அவரின் அத்துமீறல்களால் அச்சமடைந்த சிறுமி அங்கிருந்து வீட் டுக்கு தப்பிச் சென்று தாயாருக்கு கூறியுள் ளார். சமூக அந்தஸ்து கருதி தாயார் இந்த விடயத்தை மூடிமறைக்க முயன்றுள்ளார். எனினும், சில சமூக நலன் விரும்பிகளின் முயற்சியால் சிறுமியின் தாய் கடந்த புதன்கிழமை சிறுமிக்கு நேர்ந்த சம்பவம் குறித்து கிராம சேவகருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வேலணை சிறுவர் நன்னடத்தை பணிமனையில் சம்பவம் குறித்து முறையிடப்பட்டது. இதையடுத்து, அன்றைய தினமே ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து கடையின் உரிமையாளரை பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்தனர். அத்துடன், அவரை நீதிமன்றில் முற் படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## ஜனாதிபதி...

வரிகளை குறைப்பது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை மேம்படுத்துவது இந்தக் கலந்துரையாடலின் முதன்மை நோக்கமாக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 2 சிறாரின்...

இதேசமயம், சித்துப்பாத்தி மயானத்துக்குள்ளேயே படுகொலை செய்யப்பட்ட சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் இடங்கள் நேற்றைய தினம் துப்புரவு செய்யப்பட்டன. வரும் நாட்களில் அந்த இடங்களில் அகழ்வு பணிகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அரியாலை சித்துப்பாத்தியில் நேற்று வெள்ளிக்கிழமை 20ஆவது நாளாகவும் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இரண்டாவது கட்ட அகழ்வில் சிறிய இடைவெளியின் பின்னர் 5நாட்களாக தொடர்ந்த இந்த அகழ்வில் இதுவரை 25 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அத்துடன், 16 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது முதல் இதுவரை 90 எலும்புக்கூடுகள் இனங் காணப்பட்டுள்ளன. அத்துடன், 81 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, அண்மையில் மீட்கப்பட்ட சில எலும்புக்கூடுகள் முறையாக அடக்கம் செய்யப்பட்டமைக்கான சான்றாக அவை உடற்கூராய்வுக்கு உட்படுத்தப்பட்ட அடையாளமும் பிரேத பெட்டியில் வைக்கப்பட்டுமிருந்தமையால் அவை மீளவும் மூடப்பட்டன. (ஐ)

## இரா.சம்பந்தனுக்கு...

உறுப்பினர்களான இராஜவரோதயம் சம்பந்தன், ஏ. பிலபிட்டிய, டபிள்யூ. ஏ. ஏக்கநாயக்க, லக்கி ஜயவர்த்தன, மாலினி பொன்சேகா ஆகியோர் மீதான அனுதாப பிரேரணையில் உரையாற்றும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், "இரா. சம்பந்தன் இந்த பாராளுமன்றத்தில் நாங்கள் காணுகின்ற மிக அபூர்வமான ஆளுமையாகும். சம்பந்தனின் அரசியல் என்பது வெவ்வேறு யுகங்களாக ஆராயப்பட வேண்டியது. சரிதம் எழுதப்படும் போது ஒவ்வொரு யுகங்களில் அவரின் பங்களிப்பு இருந்துள்ளது. தமிழ் சமூகத்தின் விடுதலைக்காக எப்படி செயல்பட்டார் என்பது பற்றி நிறைய பேசலாம். தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு வகிபாகத்தை அவர் வகித்தார். அதற்கு இந்த சபையில் பலரும் சான்று பகிர்வார்கள் - என்றார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், "இரா. சம்பந்தன் இந்த நாட்டில் எல்லோருக்கும் முன்னுதாரமாக திகழ்ந்தவர். நல்ல பண்பான அரசியல் தலைவர். திருகோணமலை மாவட்ட மக்களால் நன்கு நேசிக்கப்பட்டவர். நடுநிலையான போக்கையும், சிறந்த அரசியல் அறிவையும் கொண்ட சம்பந்தன் ஐயாவை இழந்துள்ளோம். அவர் இங்குள்ள அரசியல்வாதிகளுக்கு உதாரண புருஷராவார்- என்றார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாமல் ராஜபக்ஷ, தேசிய அரசியலில் சிறந்த நபராக சம்பந்தன் இருந்தார். எப்போதும் அரசியல் தீர்வுக்காக முன்னின்றார். பலரும் பயங்கரவாத தீர்வை தேடிப் போனபோது அந்த விடயத்தில் அரசியல் தீர்வு காண செயல்பட்டார்." - என்றார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜீவன் தொண்டமான், "சம்பந்தன் ஐயாவுடன் எனக்கு நெருக்கமான உறவு இல்லாவிட்டாலும் அவரின் அனுபவங்கள் அவரின் ஆலோசனைகளை பெற்றுள்ளேன். என்னால் கூறக்கூடிய முன்னுதாரணத்துக்கு அவரையே குறிப்பிடுவேன்", என்றார்.

தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற குழு தலைவர் சி. சிறீதரன், "எளிமையும் நேர்மையும் அறமும் சார்ந்த தூய அரசியல் செல்நெறியில், நெகிழ்வுகளினூடே கட்டிறுக்கத்தைக் கடைப்பிடித்த தலைமைத்துவ வழிகாட்டியாக வாழ்ந்த சம்பந்தன் ஐயாவின் மறைவென்பது, ஈழத்தமிழினத்தின் இரு தலைமுறை அரசியல் வரலாற்றில் ஈடுசெய்ய முடியாத இழப்பு. அவரது அரசியல் தலைமையை ஏற்றிருந்த எங்களுக்கு இனியொரு போதும் நிரப்பவே முடியாத அரசியல் வழிகாட்டியின் இழப்பு", என்றார்.

தேசிய மக்கள் சக்தியின் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கா, "காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்கும் பொருத்தமானவராக இருந்தார். அந்த அதிர்ஷ்டம் நாட்டுக்கு கிடைக்காவிட்டாலும் அவரின் குணாம்சங்களை கொண்ட தலைவர்கள் அந்த பதவிகளுக்கு செல்ல வேண்டும்", என்றார். (ஐ)

## கிராம...

விஞ்ஞான மற்றும் ஏனைய ஆலோசனைகளை வழங்கும் என்றும் அவர் கூறினார்.

நேற்று வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## மாகாண...

எந்த வீதியாக இருந்தாலும் அந்தந்த வீதிகள் அந்தந்த நிறுவனங்களுக்கு சொந்தமானவையே. நாங்கள் எந்தளவுக்கு நியாயமாக செயல்படுகிறோம் என்பதனை வடக்கில் உள்ள சில எம். பிக்கள் அறிவர். நாங்கள் மூன்று மடங்கு நிதியை மாகாண சபைகளுக்கு ஒதுக்கியுள்ளோம். நீங்கள் இனவாத அரசியலை செய்ய வேண்டாம். அந்த கீழ்த்தரமான நாடகத்தை அரங்கேற்ற வேண்டாம் - என்றார். (ஐ)

## வசந்த...

உத்தரவிட்டார்.

பிரதிவாதிகள் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணவர்த்தன இந்த வழக்குடன் தொடர்புடைய 35 ஆவணங்களை நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

இதனையடுத்து இந்த வழக்கை எதிர்வரும் ஒகஸ்ட் 22ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## மாகாண சபை முறைமையை...

எமது அமைச்சர் மட்டக்களப்பில் நடைபெற்ற அபிவிருத்தி குழுக் கூட்டத்துக்கு தலைமை தாங்கி வருகைதந்த போது வீதிகள் தொடர்பான பல முறைபாடுகளை நாம் அவரிடம் முன்வைத்திருந்தோம்.

எமது மாவட்டத்தில் உள்ள பல வீதிகள் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமானவை. சில, பிரதேச சபைகளுக்கு சொந்தமானவை. ஆனால், நிதிகள் அனைத்தையும் மத்திய அரசாங்கம் வைத்திருக்கிறது. அவ்வாறாயின், மாகாண சபைக்கு கீழுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வதாக இருப்பின், நாம் மத்திய அரசாங்கத்திடம் கோர முடியாது. ஆனால், மாகாணத்துக்கான நிதியை வைத்துக்கொண்டு அந்த வேலைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்றும் தெரியாது. இது போன்று பல வீதிகள் உள்ளன. எனவே, உங்கள் அமைச்சின் கீழ் மாகாணத்துக்கு என்று குறிப்பிட்ட வீதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான வழிகள் ஏதேனும் உள்ளனவா? ஏனெனில், வக்கியல்ல - வெள்ளாவெளிக்கு வரும் வீதி கடும் மோசமாக உள்ளது. நோயாளர் காவு வண்டிகூட பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது. எனவே, வீதி அபிவிருத்தி அதிகார சபை, மாகாணத்துக்கு நிதி ஒதுக்குவதற்கு ஏதேனும் வழிகள் உள்ளனவா?

எனது இரண்டாவது கேள்வி, நீங்கள் சொன்னதற்கமைய மாகாணத்துக்கு இந்தத் திட்டங்களை செய்ய முடியாமைக்கு ஒரே ஒரு காரணம் நிதி இல்லாமை மாத்திரம்தான். தொழில்நுட்ப அறிவும் தொழில்நுட்ப பிரதேச அபிவிருத்தி திணைக்களத்துக்கு உள்ளது. ஆனால், உங்கள் பதிலைப் பார்க்கும் போது பிரதேச அபிவிருத்தி திணைக்களத்துக்கான வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக செய்யப்போவதாகக் கூறுகிறீர்கள். அதாவது, மாகாணத்துக்கு அதற்கான தொழில்நுட்ப நிபுணத்துவம் இல்லை. இல்லாவிட்டால் செய்ய முடியாது. இதனை செய்ய முடியாமைக்கு ஒரே காரணம், நிதி இல்லாமை மாத்திரமே.

மாகாண சபை முறைமையை பல வீனப்படுத்தும் செயல்பாடே இதற்கு காரணம். இந்த வருடம் ஆயிரத்து 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக நீங்கள் கூறுகிறீர்கள். வடக்கு மாகாணத்துக்கு 100 கோடி ரூபாய் நி.நியில் வீதி அபிவிருத்திகள் இடம்பெறப் போகின்றன என்று ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரையில் கூறப்பட்டது. மாகாண சபை முறைமையை பல வீனமாக்கும் செயல்பாடுகளை எல்லா அமைச்சுகளும் தொடர்ச்சியாக மேற்கொள்கின்றன என்றே தெரிகிறது - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஒரு வாரத்தில் மட்டும் 3,296 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஜூலை 26

நாடளாவிய ரீதியில் கடந்த 18ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் போதைப்பொருட்களுடன் 3 ஆயிரத்து 296 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர், கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, ஹெரோயினுடன் 998 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் 1,128 பேரும் ஹேஷ் போதைப் பொருளுடன் 33 பேரும் கஞ்சாவுடன் 1,039 பேரும் கஞ்சா செடிகளுடன் 30 பேரும் போதை மாத்திரைகளுடன் 64 பேரும் சட்டவிரோத சிகரட்களுடன் 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஒரு கிலோ 298 கிராம் 869 மில்லிகிராம் ஹெரோயின, 2 கிலோ 100 கிராம் 377 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 41 கிராம் 352 மில்லிகிராம் ஹேஷ் போதைப்பொருள், 82 கிலோ 101 கிராம் 187 மில்லிகிராம் கஞ்சா, 4 இலட்சத்து 44 ஆயிரத்து 190 கஞ்சா செடிகள், 2 ஆயிரத்து 323 போதை மாத்திரைகள், 145 சட்டவிரோத சிகரெட்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 67 இலங்கையர்க்கு சிவப்பு எச்சரிக்கை!



கொழும்பு, ஜூலை 26

நாடு கடந்த குற்றவியல் வலையமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கையின் ஒரு பகுதியாக வெளிநாடுகளில் மறைந்திருக்கும் 67 இலங்கையர்களுக்கு சர்வதேச பொலிஸின் சிவப்பு அறிவிப்பு அனுப்பப் பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நபர்களில் சிலர் போலி கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி கண்டறிதலைத் தவிர்க்க முயற்சிக்கின்றனர். இதனால் அவர்களின் சரியான இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கிறது என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அவர்களில் பலர் தற்போது எந்தெந்த நாடுகளில் பதுங்கியுள்ளார்கள் என்பதை புலனாய்வுத் துறை வெளிப்படுத்தியுள்ளது. அவர்களை கைது செய்து நாடு கடத்துவதை எளிதாக்குவதற்காக அரசாங்கம் தற்போது அந்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சுகளுடன் நெருக்கமாகப் பணியாற்றி வருகிறது என்றம் குறிப்பிட்டார்.

அண்மைக்காலத்தில், இவ்வாறு 20 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

## இணையவழி குற்றங்கள் 5,400 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஜூலை 26

நடப்பு ஆண்டில் இதுவரையான காலப்பகுதிக்குள் இணையவழி குற்றங்கள் தொடர்பில் 5ஆயிரத்து 400இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று கணினி அவசர செயல்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

“பேஸ்புக், வட்ஸ்அப் போன்ற சமூகஊடகங்கள் ஊடாக இடம்பெறும் மோசடி மற்றும் வன்முறை செயல்கள் தொடர்பான முறைப்பாடுகளில் கணிசமான உயர்வு காணப்படுகிறது. பொதுமக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டியது அவசியம் ஆகும்.

சமூக ஊடகங்களில் சந்தேகத்துக்க இடமான முறையில் காணப்படும் விளம்பரங்கள், ஏனைய நடவடிக்கைகள் தொடர்பில் முறைப்பாடு செய்யுமாறு கணினி அவசர செயல்பாட்டு பிரிவின் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல அறிவுறுத்தியுள்ளார்.

# மத்தள விமான நிலையத்தை மேம்படுத்த அரசு தீர்மானம்!

கொழும்பு, ஜூலை 26

**மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் செயல்பாடுகள், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற் காக தனியார் துறையினரிடமிருந்து புதிய முதலீடுகளை அழைக்க போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமு கங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு முடிவு செய்துள்ளது.**

இந்த செயல்முறையை நெறிப்படுத்தவும் பயன்படுத் தப்படாத வசதிக்கு புதிய முதலீட்டாளர்களை ஈர்க்கவும் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதி அமைச்சர் ருவன் கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

முன்னதாக, விமான நிலைய நடவடிக்கைகளை ரஷ்ய - இந்திய கூட்டு முயற்சிக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தது. ஆனால், அந்த ஒப்பந்தம் பின்னர் கைவிடப்பட்டது.

இதற்குக் காரணம், அமெரிக்கத் தடைகளுக்கு ஒரு தொடர்புடைய தரப்பினர் உட்பட்டதன் காரணமாக தேசிய வான்வெளியின் இறையாண்மை குறித்து சிக்கல் கள் எழுந்ததால், அரசாங்கம் ஒப்பந்தத்திலிருந்து விலகி யது.

இந்த நிலையில், புதிய முதலீட்டு அழைப்பின் மூலம் பெறப்பட்ட அனைத்து திட்டங்களையும் அரசாங்கம் கவனமாக மதிப்பாய்வு செய்து, விமான நிலையத்தை புத்துயிர் பெற பொருத்தமான முதலீட்டாளர்களை தேர்ந்தெடுக்கும் என்றும் பிரதி அமைச்சர் கூறினார். (ஐ)

## மேலும் 40 நாடுகளுக்கு இலவச வீசா திட்டம்!

### வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 26

சுற்றுலா துறையை விருத்தி செய்யும் நோக்கில் மேலும் 40 நாடுகளுக்கு இலவச வீசா வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம், திறைசேரிக்கு 66 மில்லியன் டொலர் வருடாந்த வருமான இழப்பு ஏற்படும். எனினும், சுற்றுலாத்துறை ஊடாக அதனை விட அதிக வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், “தற்போது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையும் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையும் ஏற்பட்டுள்ளன. உலகலாவிய ரீதியில் பல்வேறு சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தர ஆரம்பித்துள்ளனர். இதனால், சுற்றுலாத்துறை மேம்பட்டுள்ளது. இதனை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் மேலும் 40 நாடுகளுக்கு இலவச வீசா வழங்குவதற்கு கடந்த அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது. இதற்கமைவாக ஒட்டுமொத்தமாக 47 நாடுகளுக்கு இலவச வீசா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## 50 அடி பள்ளத்தில் கவிழ்ந்து கார் விபத்து

கொழும்பு, ஜூலை 26

பதுளையில் சுமார் 50 அடி பள்ளத்தில் காரொன்று வீழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

பதுளை - பசறை எரிபொருள் நிரப்பு நிலையம் அருகே நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், காரில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வரும் சிறு காயங்களுடன் மீட்கப்பட்டு பசறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ)

## ராஜித பிணை கோரிய மனு ஒகஸ்ட் 7இற்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 26

பிணை கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தாக்கல் செய்த மனு எதிர்வரும் ஒகஸ்ட் 07 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வு திட்டத்தை கொரிய நிறுவனத்துக்கு வழங்கியதில் அரசாங்கத்துக்கு 26 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாக நஷ்டத்தை ஏற்படுத்தினார் என்று கூறப்படும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனுவெல கடந்த 11 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் தன்னை கைது செய்வதை தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன் பிணை மனு தாக்கல் செய்தார்.

ஆனால், கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இந்த முன் பிணை மனுவை கடந்த 18 ஆம் திகதி நிராகரித்தது. தனது முன் பிணை மனுவை நிராகரித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மீள பரிசீலனை செய்து தன்னை பிணையில் விடுவிக்குமாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு மேல் நீதிமன்றில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி இந்திகா காலிங்கவம்ச முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, ராஜித சேனாரத்ன சார்பில் நீதிமன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி, ராஜித சேனாரத்ன தாகக்ல் செய்த முன் பிணை மனுவை கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி நிராகரித்திருந்தார். ஆனால், இந்த முன் பிணை மனுவை நிராகரிப்பதற்கான சாட்சியங்களை நீதிவான் சமர்ப்பிக்கவில்லை என கூறினார்.

இதனை கருத்தில் கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்திகா காலிங்கவம்ச, இந்த மனு தொடர்பில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கோரி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இந்த மனு எதிர்வரும் ஒகஸ்ட் 07 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் - என்றும் கட்டளையிட்டார். (ஐ)

# விபத்தில் துண்டான பெண்ணின் காலுடன் தப்பியோடிய மாணவன்!

கொழும்பு, ஜூலை 26

மாணவன் செலுத்திய மோட்டார் சைக்கிள் பெண் ஒருவரை மோதியதில், அந்தப் பெண்ணின் கால் துண்டானது. துண்டான அந்தக் கால் மோட்டார் சைக்கிளில் சிக்கிய நிலையில் அந்தக் காலுடன் அவர் தப்பியோடியுள்ளார்.

காலி - அக்மீமன - ஹினிதும் கொட கனிஷ்ட பாடசாலைக்கு அருகே நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பெண் ஒருவர் தனது பிள்ளைகளுடன் வீதியில் நடந்துசென்று கொண்டிருந்தார். அந்தச் சமயம் மாணவன் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளார். அவர் வீதியில் சென்ற பெண்ணை மோதியதில் அவரின் கால் துண்டானது. துண்டான அந்தக் கால் மோட்டார் சைக்கிளில் சிக்கியுள்ளது.

ஆனால், மாணவன் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். அங்கிருந்து தப்பிச் சென்ற மாணவன் காட்டுப் பகுதியில் அந்தக் காலை வீசியுள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த பெண் காலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பெண்ணின் கால் விபத்து நடந்து இரண்டு மணி நேரத்தின் பின்னர் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அக்மீமன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org